JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 9.] செப்டெம்பர்மீ 1890. [புஸ்த. XXI.

CONTENTS.

Medical advice to Students........ 193

Catechism on various subjects (*Continued*):—(*The five Senses, the treatment of patients, &c*)... 197

Nothing but due Enquiry can bring the truth to light; even the Senses are unreliable at times:—A Story.................. 206

The Life of a Bear, Chapter XXIV.......................... 209

The limits of human life........... 212

Peculiar eyes.......................... 214

News and Notes........................ 215

அட்டவணை.

வித்தியார்த்திகட்குச் சுகாதாரவிதிகள்.................................... 193

விவிதவிஷயவிளக்கவினாவிடை (தொடர்ச்சி):— (ஐம்பொறிகள், பிணியாளிகளுக்குச் சிகிச்சை முதலியவை)................................ 197

"கண்ணாரக்கண்டதும் பொய், காதாரக்கேட்டதும் பொய், தீரவிசாரித்தது மெய்."—ஓர் கதை. 206

ஓர் கரடியின் கதை, 24-ம் அத்தியாயம்.......................................... 209

மனிதர் வாழ்நாள் வரையறை....... 212

விசித்திரமான நேத்திரங்கள்.......... 214

வர்த்தமானக் குறிப்புகள்.............. 215

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

ஜநவிநோதிநி.

இல. 9.] செப்டெம்பர்மீ 1890. [புஸ்த. XXI.

## வித்தியார்த்திகட்குச் சுகாதாரவிதிகள்.

நமதுதேசத்தில் அதிவிரைவாகக்கல்விபயின்று சிறந்தவித்தியாபட்டங்கள்பெற்றுப்பொருளீட்டவேண்டுமென்னுமெண்ணம் வித்தியார்த்திகள் யாவருக்கும் இயற்கையிலுண்டாகின்றது. அவ்வெண்ணம் நல்லதேயாதலின் அதைப்பற்றி யாம் இங்கு குற்றங்கூறவரவில்லை. ஆயினும், விவேகத்தை அபிவிர்த்திசெய்யத்தக்க கல்வியில் அவர்களுக்கு எவ்வளவு நாட்டமிருக்கிறதோ அதில் நூற்றில் ஒரு கூறுகூடத் தேகத்தின் பாதுகாப்புக்கு இன்றியமையாதனவாயுள்ள சுகாதாரவிதிகளைக்கவனிப்பதில் அவர்களுக்கு நாட்டமில்லையாதலால் அதைப்பற்றி இச்சஞ்சிகையில் சிறிது விவகரிப்போம்:—

நிகழ்ந்த 1890-ம்௵ மார்ச்மீ 31உ வரையில் ஆங்கிலேய பாஷையிற்கல்விபயின்று சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் வித்தியாபட்டங் கொடுக்கப்பெற்றவர்களின்மொத்தத்தொகை 1,974 என்றும், அதில் தேகவியோகமானவர்களின் தொகை 118 என்றும், இக்கணக்கின்படி, நன்றாய்க்கல்விபயின்று வித்தியாபட்டம் பெற்றவர்கள் பதினெழுவரானால் மரிப்பவர் ஒருவரென்றும், பரீட்சைகளிலும் வித்தியாபட்டங்களிலும் உயர உயர மரணமடைபவரின் வீதப்பிரமாணம் அதிகப்பட்டுக்கொண்டே போகிறதென்றும் நிகழும் வருஷத்தில் சென்னைச்சர்வகலா சங்கத்தின் வருஷமகோற்சவ சந்தர்ப்பத்திலே உபந்நியாசகராயிருந்த பண்டிதோத்தமர் விரிவாயெடுத்து யாவருக்கும் விளக்கிக்காட்டினார். அதனால், புகழைவிரும்பிக் கல்வியில் சிரத்தைபாராட்டும் வித்தியார்த்திகள் அப்புகழினாலாகிய இன்பத்தை அநுபவிப்பதற்கு அத்தியாவசியமான தேகத்தைப் பாதுகாப்பதில்லையென்று பிரத்தியட்சமாய்த்தெரியவருகிறது. இங்க்லாண்ட் - ஸ்காட்லாண்ட் முதலிய தேசங்களில் கல்விபயிலும் வித்தியார்த்திகள் இந்துதேசத்து வித்தியார்த்திகளைப்போல் தேகத்தில் பலஹீனர்களாவதில்லை. ஏனெனில், முதலாவது:—அந்தப் பிரதேசங்களில் குளிர்ச்சி மிகுதியாகையால் நெடுநேரம் சிறுவர்கள் மனதைக்கொண்டு உழைத்தபோதினும் தேகம் சீக்கிரத்தில் உஷ்ணமேறி இளைப்பதில்லை. இந்தத்தேசத்திலோ உஷ்ணமிகுதியாகையால் நெடு

நேரம் மனதிற்கு வேலைகொடுக்கத் தேகம் இடந்தராது. அவ்வாறிருந்தும் இங்க்லாண்ட் முதலிய பிரதேசங்களிலுள்ளவர்களைப்போலவே இத்தேசத்திலுள்ளவர்கள் கல்வியில் சிறக்கவேண்டுமென்னும் அவாவினால் மனதைக்கொண்டு அதிகமாயுழைக்கிறபடியினாலே அந்தப் பிரதேசங்களிலுள்ள வித்தியார்த்திகளைக்காட்டிலும் இவர்கள் சீக்கிரம் தேகம்மெலிந்து பற்பலவியாதிகளுக்குள்ளாகி அகாலமரணத்திற்குஇரையாகின்றார்கள். இரண்டாவது:— இங்க்லாண்ட், ஸ்காட்லாண்ட்முதலியதேசங்களில் கல்விபயிலும்சிறுவர்கள் ஏககாலத்தில் மனமும்தேகமும் அபிவிர்த்தியாவதற்கேற்ற கல்வியிற்பழகிவருகிறார்கள். அவர்கள் விவேகத்தைவிளக்கத்தக்கநீதிசாஸ்திரம், கணிதசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம் முதலியவற்றில் இரண்டொருமணிநேரம் பயின்றவுடனே இரண்டொருமணிநேரம்படகுப்பந்தயம், நதிகளில்நீந்துவது, ஓடுவது, ஆடுவது முதலிய தேகப்பயிற்சிக்கேற்ற விஷயங்களிற் காலங்கழித்துப் பிறகு போஜனஞ்செய்து மறுபடியும் மனதை அபிவிர்த்திசெய்யத்தக்க பாடங்களைப்படித்துவருகிறார்கள். இவ்வித ஏற்பாடு அந்தத்தேசங்களின் கல்விச்சாலைகளில் அநுசரிக்கப்பட்டுவருகிறபடியினாலே, கல்விச்சாலையில் வித்தியார்த்திகள் கல்விபயிலுங்காலமுழுவதும் அவர்களுடைய மனமும் தேகமும் சமமாகவே அபிவிர்த்தியடைந்து வருகின்றன.

இத்தகைய ஏற்பாட்டினாலே, கல்விபயில்வதனால் மனதிற்கு உண்டாகும் கஷ்டத்தை வித்தியார்த்திகள் உணருவதற்கிடமில்லாமலேயிருக்கிறது. அன்றியும், அந்தத்தேசங்களில் ஜாதிபேதம் பாராட்டுவது கிடையாதாகையால் சில கல்விச்சாலைகளில் சிறுவர்கள் அன்னம், வஸ்திரம், தேகப்பயிற்சி, கல்வி முதலிய யாவற்றிற்கும் ஒருமிக்கச்சம்பளங்கொடுத்துக் கல்விபயின்று வருகிறார்கள். அப்படிப்பட்ட சிறுவர்களுடைய சுகாதாரத்திற்கேற்ற அன்னபானாதிகள், வஸ்திரங்கள், தேகப்பயிற்சி, நல்லொழுக்கம், கல்விமுதலிய யாவற்றிலும் அக்கல்விச்சாலைகளின் உபாத்தியாயர்களும் விசாரணைத்தலைவர்களும் இடைவிடாமல் நாட்டமுடையவர்களாய் அச்சிறுவர்களைத் தம் புதல்வர்களைப்போலெண்ணிப் பழக்கிவருகிறார்கள். இந்தஉசிதமான ஏற்பாட்டினாலே சிறுவர்கள் கல்விச்சாலைகளில் தாம்கழிக்கும் ஆறு ஏழு வருஷகாலம் வரையில் எவ்விதகெட்டசெய்கைகளிலும் பழகுவதற்கிடமில்லாமல் நல்லொழுக்கத்திற் சிறந்தவர்களாகின்றார்கள். ஆசிரியரோடுகூடவே மாணாக்கர் எப்போதுமிருந்து பழகுவதனால்விளையும்பயன்கள் பலவுள. அப்பழக்கத்தோடு அபிவிர்த்தியாகுங் கல்வியைத்தான் கல்வியென்று கூறலாகும். நம்முடையதேசத்துப்பூர்விக ஆரியர்கள் இவ்வழக்கத்தைமிகவும் அநுசரித்து வந்ததாக நாம் அறிகிறோம். நால்வகை ஆச்சிரமங்களுக்குள்ளே முதலாவது ஆச்சிரமமாகிய பிரமசரியத்தை அநுஷ்டிக்கும் வித்தியார்த்தி பெரும்பாலும் தன்னுடைய ஆசானோடு கூடவேயிருந்து அவருடைய ஏவற்பணிவிடைகளைச்செய்துகொண்டு கல்வி பயின்றுவருவது வழக்கம். அவ்வாசிரியன் ஓரிடத்

திலிருந்து மற்றோரிடத்திற்குப் போனாலுஞ்சரி, ஒரே இடத்திலிருந்தாலுஞ்சரி, அவரோடு கூடவே மாணாக்கர்களிருந்து கல்வி பயின்று வந்தார்களென்று கூறும் இந்துக்களுடைய பூர்வீக சரித்திரத்தைநோக்குமிடத்து, இப்போது ஐரோப்பாவில் சில தேசங்களிலுள்ள கல்விச்சாலைகளில் உசிதமென்று அநுசரிக்கப்பட்டுவருவதாய் நாம் மேலேசொல்லிய ஏற்பாடு முற்காலத்து நம்தேசத்திய ஆரியர்களால் அநுசரிக்கப்பட்ட ஏற்பாடாகவே யிருக்கிறதென்று தெரியவருகின்றது. பூர்வீகத்தில் உரோம்-கிரீஸ் என்னும் தேசங்களிலிருந்த சிறந்த தத்துவசாஸ்திரிகளும் தம்முடைய மாணாக்கர்களுக்குச் சோலைகளிலிருந்துகொண்டும், காலை மாலைகளில் உலாவிக்கொண்டும் சாஸ்திரக்கருத்துகளைப்போதித்துவந்ததாக நாம் பூர்வசரித்திரத்தினால் அறிகிறோம். அப்படியிருந்தும், இப்போது நம்தேசத்துச்சிறுவர்கள் கல்விபயிலும் மாதிரிகள் காலபேதத்தினாலே அவர்களுடையமனத்தையும் தேகத்தையும் அதிசீக்கிரம் மெலிந்துபோகச் செய்யத்தக்கவையாயிருக்கின்றனவென்பதைப்பற்றி நாம் துக்கிக்கின்றோம். ஆயினும், இத்தேசத்துச்சிறுவர்கள் அடியில் வரும் சிலவிஷயங்களைக் கவனிப்பார்களாகில் பெரும்பயனடைவரென்பதற்கு ஐயமில்லை:—

1. அறிவுக்கும் தேகத்துக்கும் மிகவுஞ் சம்பந்தமிருக்கிறதென்பதை ஒவ்வொரு வித்தியார்த்தியும் கவனிக்கவேண்டும். தேகத்தைச்சேர்ந்த அகத்துறுப்புகளும் புறத்துறுப்புகளும் தத்தம்தொழில்களைச்சரியாய் நடத்திக்கொண்டுவந்தால்மாத்திரம் அறிவு சுடரொளியைப்போல்விளங்கும். தீபம் எரிவதற்கு நெய்யும் திரியும் கலசமும் அத்தியாவசியமான பொருள்களாயிருப்பவைபோல விவேகம் விளங்குவதற்கு நம்முடைய சரீரமும் அதைச்சேர்ந்த காணங்களும் தத்துவங்களும் இன்றியமையாதனவாயிருக்கின்றன. இவைகளுக்கு ஏதேனும் பழுது நேரிடுமாயின் உடனே விவேகங்குன்றுமாகையால், கல்விபயின்று விவேகத்திற் சிறக்கவேண்டுமென்னும் எண்ணமுடைய ஒவ்வொருவரும் இயன்றவரையில் தேகத்தைப்பாதுகாத்துக்கொள்ள முயலவேண்டும்.

2. அதிவிரைவாகச் சாஸ்திரங்களையெல்லாம் வாசித்துத்தேர்ச்சியடைந்துவிடவேண்டுமென்னும் எண்ணத்தினால் சிலர் தம்முடைய தேகம் தாங்கக்கூடிய அளவுக்கு அதிகமாக வருந்தி வாசிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பிள்ளைவரங்கேட்கப்போய்ப் புருஷனைப்பறிகொடுக்கும் மாதரைப்போல் யாவராலும் நகைக்கப்படுவர். அவ்வாறின்றித் தம்முடைய தேகம் எவ்வளவுவரையில் இடங்கொடுக்குமோ அவ்வளவுவரையில் மிதமாகவாசித்துக்கொண்டு போவார்களாகில் கல்வியில் தேர்ச்சியடையுங்காலம் நீடிக்குமாயினும் பாதகமில்லை. கற்ற அளவுக்கு விளையத்தக்க எல்லாப்பயன்களையும் அநுபவித்துச் சுகிப்பதற்கிடமிருக்கும். எல்லாரும்ஒரேமாதிரியாகக்கட்டமைதிபெற்ற

தேகத்தை இயற்கையில்பெற்றிருக்கவில்லையென்பதை ஒவ்வொருவரும் பிரத்தியட்சமாகக்காணலாம். அப்படியிருக்க, இயற்கையில் தேகபலஹீனர்களாயுள்ளவர்கள் சுபாவத்தில் தேகபலாஷ்டிகர்களாயுள்ளவர்களைப்போலவே கல்வியிற்சிறக்கவேண்டுமென்று எண்ணங்கொள்வது பெருமோசம். சில வித்தியார்த்திகள் மற்றவர்களைப்போல் உயர்ந்த பரீட்சைகளில் தேறிச் சிறப்படையாமைக்குக் காரணமெல்லாம்-பெரும்பாலும் அவர்களுடையதேகபலஹீனமே. இயற்கையில் சரீரபலங் குன்றியிருக்குமானால் அதற்கு யாரென்னசெய்யலாம்? அப்படிப்பட்ட வித்தியார்த்திகள் விஷயமாய் ஒருவருங்குற்றங்கூறுவதற்கிடமிராது. தேகபலம் இயற்கையில்பெற்றும் சோம்பல் காரணமாக மெய்வருந்தி வாசிக்காதவர்களைப்பற்றிமாத்திரம் குறைகூறுவதற்கிடமிருக்கும்.

3. இயற்கையில் சரீரபலம்பெற்றிருக்கிற வித்தியார்த்திகளும் நாளொன்றுக்கு ஆறு ஏழு மணிநேரத்திற்கு மேற்பட்டுக் கல்வியில் பயில்வது யுக்தமன்று. ஒருநாள் முழுவதும் சிலர் ஆசைமிகுதியால் வாசித்துக்கொண்டிருக்கலாம். ஆனால், வாஸ்தவத்தில் சிரத்தையாய் அவர்கள் வாசிக்குங்காலமெல்லாம் உயர்ந்தது ஆறு ஏழுமணிநேரந்தானிருக்கும். மற்றநேரங்களில் கையிலே புஸ்தகமாத்திரம் அழகாயிருக்குமேயன்றி அதனாலாகியபிரயோசனம் யாதும் அவர்களுக்குண்டாகமாட்டாது. ஆகையால், ஒருநாள் முழுவதும் புஸ்தகத்தைக்கையிலேயே வைத்திருந்து வாசித்து வீண்காலம் போக்குவதைவிட இரண்டொருமணிநேரம் நன்றாய்ச் சிரத்தையாக வாசித்துவிட்டுச், சுத்தகாற்றுவீசும் இடங்களிலே உலாவிக்கொண்டாவது, பிறருடன் ஏதேனும் சாதாரண விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டாவது சிறிதுநேரம் காலங்கழிப்பது உத்தமம். மூளைக்கு இடைவிடாமல் வேலை கொடுத்துக்கொண்டு வந்ததனால் அனேகர் சித்தப்பிரமைகொண்டு உன்மத்தர்களானார்களென்பதை நாம் பன்முறையுங் கேள்விப்படுகிறோம்.

4. வித்தியார்த்திகள் யாவரும் அதிகாலையில் எழுந்திருந்து தத்தம் தேகபலத்துக்கேற்றவாறு கூடியவரையில் வேகமாய் நடக்கப்பழகுவது உத்தமம். இதனால், தேகத்தின் நாம்புகளின்வழியாக உதிரவோட்டம் அதிகமாகும். பசி நன்றாயெடுக்கும். ஆகாரம் சீக்கிரத்தில் ஜீரணித்துவிடும். மலச்சிக்கல் முதலியவியாதிகள் அணுகா. வாசிக்கும்போது புத்திதெளிவாயிருக்கும். சுத்தமானகாற்றுவீசும் இடங்களில் மேற்கண்டபடி உலாவப்போவதனால் காலம் வீணில்கழிந்துபோகிறதேயென்று ஒருவரும் விசனப்படவேண்டுவதில்லை. இவ்விஷயத்தை உணர்த்துவதற்காகவே "வைகறைத்துயிலெழு." என்றும், 'பிராதக்காலத்திலெழுந்திருந்து ஸ்நானஞ்செய்து மலையின்மீதேறியாவது நந்தவனத்திற்குச்சென்றாவது புஷ்பங்கள் கொய்துகொண்டுவந்து தேவாராதனைசெய்தபின்னர் "வெள்ளிமுளைக்கப் பள்ளிக்குவாரும்." என்

னுங்கட்டளைப்படி கல்விச்சாலைக்கு வரவேண்டுமென்றும், ஆத்திசூடி- வேழமுகத்து முதலிய பாலபாடங்களில் புத்திமதிகள் கூறப்பட்டிருக்கின்றன.

5. அடிக்கடி ஆகாரம் உட்கொள்ளும்பழக்கத்தை வித்தியார்த்திகள் கூடியவரையில் நீக்கவேண்டும். ஒருமுறை உட்கொண்ட ஆகாரம் நன்றாய் ஜீரணமாகும்வரையில் இரண்டாவதுமுறை போஜனம்செய்வது எவர்க்கும் ஏற்றதன்றேயாயினும் முக்கியமாய் வித்தியார்த்திகளுக்கு எவ்வளவும் ஏற்றதேயல்ல. அன்னாசயப்பை இடைவிடாமல் ஏதேனும் ஆகாரத்தினால் நிரப்பப்பட்டுக்கொண்டேவருமாயின் அது சீக்கிரம் பலஹீனமடைந்துவிடும். இடையிடையே சில சமயங்களில் அன்னாசயப்பை ஓய்வாயிருப்பது மிக்க உசிதமென்று சிறந்த ஐரோப்பிய தேகதத்துவசாஸ்திரிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்விஷயத்தை உத்தேசித்தே "மீதூண்விரும்பேல்." என்றும், "நுண்மைநுகரேல்." என்றும் சிறுவர்களுக்குப் புத்திமதிகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்துக்களாகிய நம்மனோர் பட்சத்துக்கொருமுறையேனும் மாதத்துக்கொருமுறையேனும் தெய்வ உபாசனை விஷயமாக உபவாசமிருப்பது வழக்கமல்லவா? இது மிகவும் உசிதமான ஏற்பாடென்று ஐரோப்பிய வைத்தியசாஸ்திரிகள் சிரக்கம்பஞ் செய்கின்றார்கள். சிலநாள்களுக்கொருமுறை ஒருபொழுதேனும் ஒருநாளேனும் உபவாசமிருப்பதனால் அன்னாசயப்பைமுதலிய தேகத்தின் சில தத்துவங்கள் ஓய்வடைந்திருக்குங்காரணத்தினாலே அவைகள் பலம்பெற்று நீடித்துத் தத்தம் தொழில்களைச்செய்துகொண்டிருக்குமென்று வைத்தியசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். அதனால் தேகதத்துவங்களுக்கு மிகவும் ஆரோக்கியமுண்டாகுமென்பதற்கெவ்வளவும் ஐயமின்று. வித்தியார்த்திகள் ஆகாரமுட்கொண்டவுடனே புத்திக்கு அதிகவேலைதருவது எவ்வளவும் உத்தமமன்று. ஏனெனில், அன்னாசயப்பையில் ஆகாரம் நிரம்பவிருக்கும்போது ஏனையபாகங்களைக்காட்டினும் அந்தப்பையைச்சுற்றிலும் உதிரம் அதிகமாக வோடிக்கொண்டிருக்குமாகையால் அத்தருணத்திலே மூளை இளைப்படையும்.

இவ்விஷயங்களை நம்தேசத்து வித்தியார்த்திகள் கவனித்துக் கூடியவரையிலே தேகத்தின் சுகாதாரத்துக்கேற்ற ஏனைய விதிகளையுமநுசரித்துக் கல்விபயின்றுவருவார்களாகில் கல்வியினாலாகிய பயனை அவர்கள் அடைவார்களென்பது திண்ணம்.

## விவிதவிஷயவிளக்க வினாவிடை.

(தொடர்ச்சி.)

66. சீடன்.—யானையின் குணகுணங்களை விளக்குவதற்காகத் தாங்கள் கூறிவந்த அனேக விநோதவிர்த்தாந்தங்களை யான்கேட்டு ம

கிழ்வெய்தினேன். யானையின் விஷயமாக இன்னும் இரண்டொருவினாக்களுண்டு. “யானையுண்ட விளங்கனி.” என்று பழமொழிவழங்குகிறதே, அதன் உண்மையைவிளக்கவேண்டும்.

ஆசிரியர்.—யானைவிளங்கனியை உடைக்காமல் அப்படியே விழுங்கிவிடுமாகில் அதனுள்ளிருக்கும்வஸ்து[illegible]து ஆகாரமாகக்கிரகித்துவிடுகிறபடியால் அது மலவிசர்ஜ்ஜனம் செய்யும்போது அக்கனியின்மேலோடுமாத்திரம் உண்டபடியேயிருக்க அதனுள்ளேஒன்றுமிராமலிருக்கிறதென்பது அப்பழமொழியின்கருத்து. இதை நூலாசிரியர்கள் அடிக்கடி “வெருவரும்வேழமுண்ட வெள்ளில்போல்வறிதாகி.” என்பதுபோல உபமானமாகக் கையாள்வதுவழக்கம். இவ்விஷயத்தைப் பிரத்தியட்சமாகக் கண்டறியவேண்டுமென்று சிலர்விளங்கனியையானைக்குத்தந்து அதன் மலவிசர்ஜ்ஜனத்தைச் சோதித்துப்பார்க்கையில், அவ்விளங்கனிஉள்ளிருக்கும்வஸ்துவோடுஅப்படியேயிருக்கக்கண்டார்கள். அதன்மேல் அவர்கள் ஆச்சரியமடைந்து நெடுங்காலமாக உலகத்தில் வழங்கிவரும் இப்பழமொழி பொய்யாமா? என்று ஐயமுற்று ஆராய்ச்சிசெய்கையில், பதார்த்தகுணசாஸ்திரத்திலே பற்பல கனிகளின் குணாகுணங்களைச் சொல்லிக்கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் விளங்கனியைக்குறித்துப் பேசிக்கொண்டுவருகையிலே சில விளங்கனிகள் செடியிலிருக்கும்போதே அவைகளுக்கு ஓர்வகைவியாதி காணுகிறதென்றும், அவ்வியாதிக்குயானையெனப்பெயரொன்றும், அந்தவியாதி அக்கனிகளைப்பற்றியமாத்திரத்தில் அவைகளின்மேலோடுஇருந்தபடியிருக்க உள்ளேயிருக்கும்வஸ்து கெட்டு மாய்ந்து ஒன்றுமில்லாமற் போய்விடுகிறதென்றும் சொல்லப்பட்டிருப்பதைக்கண்டறிந்துஅப்பழமொழியின் கருத்தை நன்குணர்ந்தார்கள். ஆகையால், உயிரோடிருக்கும் யானையென்னும்பெயருடைய பிராணியென்று“யானையுண்ட விளங்கனி.” என்னும் பழமொழியிலுள்ளயானையை அர்த்தம்பண்ணுவதுகூடாது. இவ்வாறே “தேரைமோந்தகாய்.” என்று சில இளநீருக்குப்பெயர் வந்திருக்கிறது. பதார்த்தகுணசாஸ்திரத்தில் இளநீரைப்பற்றிய வியாதிக்குத் தேரை என்னும் பெயர் இடப்பட்டிருக்கிறது. “தேரையார் செவ்விளநீர் மோரார் பழிசுமப்பார்.” என்னும்பிரமாணமே இவ்வுண்மையை விளக்குகின்றது. எவ்வாறெனில், தேரையென்னும் பிராணி செவ்விளநீரை முகருவதுங் கிடையாது. அதனால் அக்காய் கெட்டுப்போவதுங்கிடையாது. ஆனால் அந்தப்பிராணி முகர்வதனால் அதுகெட்டுப்போகிறதென்னும் பழியைமாத்திரம் அது வீணேசுமக்கிறதென்னுங்கருத்து இவ்வாக்கியத்தில் அமைந்திருக்கிறது.

67. சீ.—“யானையுண்ட விளங்கனி.”என்னும் சொற்றொடரில் யானையென்பது விளங்கனியைப்பிடிக்கும் வியாதிக்குப்பெயராயிருப்பதைச் சாதாரண ஜனங்கள் உணராமற்போவது இயற்கையே. சிறந்தபண்டிதோத்தமர்களாகிய நூலாசிரியர்களும் இவ்விஷயத்தை உபமானமாக எடுக்கும்போது யானையாகிய பிராணிக்குள்ள அடைமொழிகளை

யெல்லாம் முன்னே சேர்த்து "புழைக்கைச்சிறுகட்புகர்முகக்கரியுண் பொருவரும் வெள்ளிலங்கனிபோல்." என்று ஏன் கூறவேண்டும்? பதார்த்தகுணசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதாகத் தாங்கள்கூறும்உண்மையை அவர்கள் அறிந்திலரோ?

ஆ.—அப்பண்டிதோத்தமர்களாகிய நூலாசிரியர் அவ்வாறுகூறியதற்கு இரண்டுகாரணம் [illegible] சொல்லலாம். முதலாவது.—பதார்த்தங்களின் குணகுணங்களைக்கூறத்தக்க சாஸ்திரங்களைக்கவிபாடும் வித்வசிரோன்மணிகள் உணர்ந்திராமலிருக்கக்கூடும். இரண்டாவது.—அக்கவிவாணர்கள் அந்தச்சாஸ்திரத்தையுணர்ந்துயானையென்பது விளங்கனியைப்பற்றும் பிணிக்குப்பொருளென்பதைத்தெரிந்திருந்தபோதினும், சாதாரணஜனங்கள் எதெதைஎப்படியெப்படிநம்பியிருக்கிறார்களோ அதை அப்படிஅப்படியேஉபமானமாகக்காட்டினால்தான் உபமேயம்அவர்களுக்குச் சுலபமாகவிளங்குமென்றெண்ணி அவர்கள் அதைஅவ்வாறு உபயோகப்படுத்தியிருக்கலாம். ஏனெனில், சுலபத்தில்விளங்காத உபமேயத்தை விளக்கவேண்டுமானால் நன்றாய்த்தெரிந்துள்ள உபமானத்தைக்காட்டித்தான் புலப்படுத்தவேண்டும். அவ்வுபமானம் வாஸ்தவத்தில் இல்பொருளாயிருக்கினும் பாதகமில்லை. இல்பொருளுவமையணியென்றே ஒரு அலங்காரம் அலங்காரசாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. மகாவிஷ்ணு தம்மைச்சரணடைந்த தேவர்களுக்குக் கருடவாகனாரூடராய்த் தரிசனந்தந்தது - கறுத்தமேகம் செந்தாமரை மலர்க்காடுபூத்துச் சூரியசந்திரர்களாகிய இருசுடரை இருபுறத்திலுமேந்தித் தாமரைப்பூவிலுள்ள இலட்சுமியுடன்விளங்க ஒரு செம்பொன் மலைமேல் தோன்றியதை யொத்ததெனப்பொருள்பட,

"கருமுகிற்றாமரைக் காடுபூத்துநீ
டிருசுடரிருபுறத் தேந்தியேடவிழ்
திருவொடும்பொலியவோர் செம்பொற்குன்றின்மேல்
வருவபோற்கலுழன்மேல் வந்துதோன்றினான்."

என்று கம்பர்கூறியிருக்கின்றனர். மேகம் மேலேகாட்டிய லட்சணத்தோடு எப்போதும் தோன்றுவதில்லையே, அதை உபமானமாக இங்குசொல்லலாமா? என்று ஆசங்கிப்பதுகூடாது. இதுபோலவே, குளவி சிறுபுழுக்களைக்கொண்டுவந்து தன்னிறமாக்கிவிடுகிறதென்னும் ஒரு நம்பிக்கை எப்படியோ ஜனங்களுக்கு வந்திருக்கின்றது. இதுவும் ஆராய்ச்சியால் உண்மையாகத்தோன்றவில்லை. ஆயினும், "புவியில்வேட்டுவனெடுத்தமென் புழுப்போல்." என்று இலக்கியங்களில் இவ்விஷயம் உபமானமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு வேட்டுவனென்பது குளவி. ஆகையால்; இப்படிப்பட்ட விஷயங்கள் எங்கெங்கு இனிவந்தபோதினும் மேலே யான் கூறிவந்த நியாயங்களைக்கொண்டு சமாதானஞ் செய்துகொள்வாயாக.

68. சி.—தாங்கள் யானையின் குணகுணங்களைப்பற்றிக் கூறிவந்த அனேகவிர்த்தாந்தங்களையும் அதைப்பற்றிய மற்றவிஷயங்களையும்

நன்குணர்ந்தேன். இன்னுஞ்சிலவிஷயங்களைக்குறித்து இன்றுவினவுகிறேன். வெளிப்புறத்தேயுள்ள சகலவிஷயங்களையும் நாம் அறிந்துகொள்வதற்கு வாயில்களாகவுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுக்குள்ளே நான்குபொறிகள் முகத்தினிடமாகவே அமைக்கப்பட்டிருப்பதற்கு ஏதேனுங்காரணமுண்டா?

ஆ.—காரணமுண்டு. புறத்தேயிருக்கும் விஷயங்களை அறிந்துகொள்ளும் அறிவாகிய ஆன்மாவின் இருப்பிடம் கபாலத்திலுள்ள மூளையேயாதலின், எல்லாவிஷயங்களையும் அந்த ஆன்மாவுக்கு அறிவிக்கத்தக்க சாளரங்களாயுள்ள பொறிகள்யாவும் கூடியவரையில் அதற்குச்சமீபமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், சப்தம், ரூபம், ரஸம், கந்தம், என்னும் உணர்ச்சிகள்யாவும் முகத்துக்கேயுண்டு. அன்றியும், ஏனைய பாகங்களுக்குள்ள ஸ்பரிசவுணர்ச்சி முகத்துக்குமுண்டு. ஸ்பரிச வுணர்ச்சி மற்றெல்லாப்பாகங்களுக்கு மிருந்தபோதிலும் அவைகளுக்கு விளையும் நன்மை தீமைகளையெல்லாம் தெளிவாய்க்காட்டத்தக்கது முகமேயாம். இது காரணமாகத்தான் "எண்சாணுடம்புக்குஞ் சிரசேபிரதானம்," என்று மேலோர்கூறிய பழமொழியும் நடைபெற்றுவருகின்றது.

69. சி.—கண்களுக்குமேலேயுள்ள புருவங்கள் நமக்கு அழகுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது அவைகளால் வேறே ஏதேனும் பயனுண்டா?

ஆ.—புருவங்களினால் கண்களுக்கு மிகவும் பயனுண்டு. நாம்மெய்வருந்தி வேலைசெய்யும்போது தலையிலும்நெற்றியிலும்உண்டாகும் அசுத்தமான வியர்வைவழிந்துகண்ணுக்குள்விழாதபடி புருவம்பெரும்பாதுகாப்பாயிருக்கின்றது. மேலும், அது நெய்ப்பசையோடுகூடியசிறுமயிர்களால் அமைக்கப்பட்டிருக்கிறபடியினாலே நெற்றிமுதலிய மேற்புறத்தினின்றும் வந்திறங்கும் வியர்வையை அதுமெல்லெனத்திருப்பிக்கன்னத்தின்வழியாக இறங்கச்செய்கின்றது. எல்லா அவயவங்களினும் கண்மிகவும் நுண்ணியதும் முக்கியமானதுமாகையால் புருவம் அதற்குமேலே ஒருநல்லவரம்புபோலிருந்து அதைப்பாதுகாக்கும்பொருட்டே யமைக்கப்பட்டிருக்கின்றது. உஷ்ணப்பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்குஅடிக்கடிநெற்றியில் வியர்வையுண்டாகுமாதலால்அவ்வசுத்தநீரினாலே கண்ணுக்கு ஊனம் நேரிடாதபடி அவர்களுக்குப்புருவங்கள்கனத்தும்கறுத்துமிருக்கின்றன. சீதளப்பிரதேசவாசிகளுக்கு அதிக வியர்வைபெரும்பாலுமுண்டாவதில்லையாகையால் அவர்களுக்குப்புருவங்கள் அவ்வளவாகக்கறுத்தும் கனத்துமிருப்பதில்லை. அன்றியும், மேலிருந்து அதிகவெளிச்சம் கண்களுக்குள் திடீரென்றுபாய்ந்து அவைகளைக்கெடுக்காதபடி புருவத்தின்மயிர்கள் பெரும்பாதுகாப்பாகவிருக்கின்றன. எந்தெந்தப்பொருள் எந்தெந்தஇடத்தில் எப்படியெப்படி யமைந்திருப்பதைப்பார்த்து நம்முடைய கண் பழகியிருக்கி

ன்றதோ அதைத்தான் அழகு என்பது. அப்படிப்பட்ட பழக்கத்திற்கு விரோதமாய், ஓரிடத்திலிருக்கவேண்டியதொன்று இராமற்போனாலும், இராதது நூதனமாயிருந்தாலும் அதை அழகன்றென்று பெரும்பாலும் நாம் கூறுகிறோம். ஆகையால், புருவங்கள் கேவலம் அழகுக்காகவே ஈஸ்வரனால் அமைக்கப்பட்டனவென்று நாம் கருதுவது கூடாது. இப்படியே ஒவ்வொரு அவயவமும் ஒவ்வொரு முக்கியமான உபயோகத்திற்காகவே ஈஸ்வரனால் அமைக்கப்பட்டிருக்கிறதென்றறிக.

70. சி.—கண்ணிமைகளினாற் பயன் யாது?

ஆ.—தும்பு தூசுமுதலியவை கண்ணுக்குள் விழாதபடி இமையானது கண்ணைக்காத்துக்கொண்டிருக்கின்றது. மேலும், நமக்கு அதிக வெளிச்சம்வேண்டியபோது நன்றாய்த் திறப்பதற்கும் வெளிச்சம்வேண்டாதபோது மூடிக்கொள்வதற்கும் இமையானது தக்ககருவியாயிருக்கின்றது. ஒருபொருளைக்கண் இடைவிடாமல் உற்றுப்பார்த்துக்கொண்டேயிருக்குமானால் சிறிதுநேரத்திலெல்லாம் அந்தப்பொருள் கண்ணுக்குத்தெரியாமலேபோய்விடும். ஏனெனில், ஒருபொருளை இமைக்காமல் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும்போது கண்வறட்சியடைகின்றது. இமை கொட்டுவோமாகில் அவ்வறட்சிநீங்கி க்ஷணநேரம் கண் ஆசோதையாயிருந்து ஈரம் பெறுகின்றது. முற்காலத்தில் கண்ணிமையைக்கத்தரித்துவிடுவது மகம்மதியர்செய்துவந்த ஒருவகைதண்டனையாகும். அவ்வாறு இமைஇழந்தவர்கள் சிலதினங்களுக்குள்ளாகக் குருடர்களாயிருந்து அல்லற்பட்டுவந்தார்கள். கண்ணுக்கு இமை இராவிடில் கண் எவ்வளவும் ஜீவிக்கவேமாட்டாது.

71. சி.—கண்ணிமையின் ஓரங்களிலுள்ள மயிர்களின் பயன் யாது?

ஆ.—சிறுகிருமிகளும் தும்பு தூசுகளும் கண்ணுக்குள் புகாதபடி இந்தமயிர்கள் முன்னும் பின்னும் ஆடிக்கொண்டு கண்ணுக்குப் பெரும்பாதுகாப்பாயிருக்கின்றன. அன்றியும், அவை வெளிச்சத்தைப்பாகுபாடுசெய்து கிரணங்களைத் தனித்தனியே பிரித்துக்கண்ணுக்குக்காட்டுகின்றன. இமைக்கு ஓரங்களில் மயிர்களிராவிடில் ஒளியின் கிரணங்கள் நமக்குப்புலப்படுவது கூடாமை.

72. சி.—அரைச்செவிடாயிருப்பவர்கள் பிறர் பேசுவதைக்கேட்க முயலும்போது தங்களுடைய செவிக்குப்பின்புறமாகக் கையை விரித்து ஏன் வைத்துக்கொள்ளுகிறார்கள்?

ஆ.—வெளியேயுள்ள ஓசை வீணே காதுக்குப் பின்புறமாய்க்காற்றோடுகலந்து போகாதபடி அதைமறுபடியும் திருப்பிக்காதுக்குட்புகும்படி செய்வதற்காகவே அவர்கள் அவ்வாறு கையைவிரித்துக்காதுக்குப் பின்புறமாக வைத்துக்கொள்ளுகிறார்கள்.

73. சி.—காது நன்றாய்க்கேட்காதவர்கள் சிலசமயங்களில் நாம்மெல்லப்பேசும்போது விஷயங்களைச்சுலபமாய் அறிந்துகொள்ளுகிறார்களே, அதற்குக் காரணம் யாது?

ஆ.—அதற்கு இரண்டு காரணங்கள் உள. செவிடர்களுடைய செவிகளின் உட்புறமாயுள்ள சப்த ஜவ்வு ஊனமடைந்திருக்கிறபடியால், உரத்த சப்தத்தோடு நாம் அவர்களிடத்திற் பேசுவோமானால் அந்தஓசை அந்த ஜவ்வின்மேல் படும்போது அதிக அதிர்ச்சியினாலே அது சரியாய் இயங்காமற்போய்விடும். சொல்லும்விஷயம் அதனாலே அவர்களுக்கு நன்றாய்க்கேளாது. அன்றியும், நாம் உரக்கப்பேசும்போது சப்தம் பிறப்பதற்குரிய நா, உதடுகள் முதலியவை இயங்குவது செவிடருடைய கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படமாட்டாது. அவ்வாறன்றி நாம்கூடியவரையில் மெல்லெனப்பேசுவோமாகில் உதடு முதலிய உச்சரிப்புக்குரிய உறுப்புகளியங்குவதைச் செவிடர்கள் உற்றுப்பார்ப்பார்களாகில் நம்முடைய கருத்து இன்னதென்பதை அவர்கள் இலேசாய் அறிந்துகொள்ளக் கூடியவர்களாயிருப்பார்கள். ஆகையால், செவிடர்களிடத்தில் உரக்கக்கூவுவதுமுற்றும் அனுவசிய மென்பதை நீயறிந்துகொள்வாயாக.

74. சி.—காது நன்றாய்க்கேட்காமலிருப்பவர்கள் கைக்கடிகாரம் போகிறதா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டுமானால் அதைத் தங்களுடையபற்களின்மேல் வைத்தால் செவிக்குள் ஓசைகேட்கிறதென்கிறார்களே, அதற்குக் காரணம்யாது?

ஆ.—ஓசை கடினபதார்த்தங்களின் மூலமாய் ஒருபுறத்தினின்றும் மற்றொருபுறத்திற்கு அதிகசுலபமாய்ச்செல்லுமென்பதை நீ உணரவேண்டும். போய்க்கொண்டிருக்கும் கைக்கடிகாரத்தைப் பற்களின்மேல் வைத்தமாத்திரத்தில் அப்பற்களும் அவைகளுக்குமேலே முகத்தில் தொடர்ச்சியாயுள்ள எலும்புகளும் கடினபதார்த்தங்களானபடியால் சப்தம் அதிகசுலபமாய் ஓசை நரம்புகளுக்கெட்டி டிக் டிக் என்னும் ஓசை நன்றாய்க்கேட்கும். செவிடர்களும் ஓசையைக்கேட்பதற்கு இது ஒருநல்ல உபாயந்தான்.

75. சி.—ஓரிடத்திலிருந்து நறுமணம்வீசும்போது அதை நாம் நன்றாய் அநுபவிக்கவேண்டுமானால் யாதுசெய்தல்வேண்டும்?

ஆ.—அப்படிப்பட்டசமயத்தில் உடனே வாயை நன்றாய் மூடிக்கொள்ளவேண்டும். அவ்வாறு நாம் செய்வோமாகில் சுவாசம் முழுவதும் நாசித்துவாரத்தின் வழியாகவேசெல்லும். அப்போது நறுமணம் எவ்வளவும் வீண்போகாமல் முற்றும் நாம் அநுபவித்தற்கிடமிருக்கும். துர்க்கந்தம் எவ்விடத்திலாவது இருக்குமானால் அதனாலுண்டாகும் அருவருப்பை நாம் நீக்கிக்கொள்ள விரும்புகிறபட்சத்திலே அவ்விடத்தைவிட்டு விலகிப்போவதே உத்தமம். அவ்வாறுவிலகிப்போவது கூடாமையாயிருக்கின் உடனே வாயைநன்றாய்த்திறந்துகொள்ளவேண்டும். அவ்வாறு நாம்செய்வோமாகில், நாசித்துவாரத்தின்வழியாய் அத்துர்க்கந்தம் அவ்வளவாகப்புகுவதற்கிடமிராது. அதனாலுண்டாகும் அருவருப்பும் நமக்குத்தோன்றாது.

76. சி.—ரஸம்-கந்தம் என்னும் இவ்விரண்டு உணர்ச்சிகளுக்குமுரிய வாயையும் நாசியையும் அதிசமீபத்தில் அமைத்ததற்கு ஏதேனுங்காரணமுண்டோ?

ஆ.—காரணமிருப்பது பிரத்தியட்சமாய் விளங்குகிறது. ஏனெனில், இன்னின்ன வாசனையுள்ளது உருசியுள்ளதாகத்தக்கதென்று நாம் அநுபவத்தில் கண்டிருக்கிறபடியால், யாதொருபதார்த்தம் உருசியாயிருக்குமென்றாவது, உருசியாயிராதென்றாவது முன்னே வாசனையால் நாசியறிந்து நமக்கு எச்சரிக்கை பண்ணுகிறபடியினாலே அது வாய்க்குச்சமீபமாக இருப்பதுமிகவும் அவசியந்தான். இம்மட்டோ? நாசிக்குமேலிருக்கும் கண்ணும் பதார்த்தங்களின் குணாகுணங்களை அநுபவத்தினாலறிந்து நிச்சயிக்கின்றது. மேலே கண்ணும் அதற்குக்கீழ் மூக்கும் அதற்குக்கீழே வாயும் அமைந்திருக்கிற அழகை நாம்யோசித்துப்பார்க்குமிடத்து, மேலே ஒருபெரிய உத்தியோகஸ்தனைப்போல் கண்ணும், அதற்குத்தாழ்ந்த உத்தியோகஸ்தனைப்போல் மூக்குமிருந்து முறையேபார்வையினாலும் வாசனையினாலும் பதார்த்தங்களின் குணாகுணங்களைப் பரிசோதித்துவாய்க்குள்ளே விடுவதற்காக அவை அவ்வாறு ஈஸ்வரனால் அமைக்கப்பட்டிருப்பனவாய்த் தோன்றுகின்றன.

77. சி.—ஐம்புலன்களுக்குள்ளே ஸ்பரிசவுணர்ச்சி முக்கியமானதென்று யாவருங்கொண்டாடுவதற்குக்காரணம் யாது?

ஆ.—ஏனெனில், சப்தம்-ரூபம்-ரஸம்-கந்தம் என்னும் ஏனைய நான்கு உணர்ச்சிகளும் ஒவ்வோர்காலத்தில் நமக்கு மனோபிராந்தியை விளைவிக்கக்கூடும். உண்மையை அவ்வளவாகப்புலப்படுத்தா. ஸ்பரிசவுணர்ச்சியோ அப்படியல்ல. வாய்-கண்-மூக்கு-செவி என்னும் பொறிகள் நம்மை மோசம்செய்தபோதினும் மெய்யினாலுண்டாகும் ஸ்பரிசவுணர்ச்சியைக்கொண்டு நாம் உடனே உண்மையை நிச்சயித்துக்கொள்ளலாம். எப்படியெனில், நம்முடைய மனோபிராந்தியினாலே ஏதோ ஒருஉருவெளித்தோற்றம் நமக்குமுன்னே தோன்றுகின்றதென்று வைத்துக்கொள்வோம். அதை நாம் உற்றுப்பார்க்கப்பார்க்க அது நடக்கிறதுபோலவும் பேசுகிறதுபோலவும் நம்மைப்பயமுறுத்துவதுபோலவும் நமக்குத்தோன்றுகிறதல்லவா? அப்படிப்பட்டகாலத்தில் நம்முடைய கண்ணும் செவியும் மேலும் மேலும் அத்தோற்றத்தை விர்த்திசெய்கின்றனவேயன்றி உண்மையைப்புலப்படுத்தாமல் நம்மைக்கைசோரவிடுகின்றன. நமக்குமுன் காணப்படும் தோற்றம் உண்மையா அல்லவாவென்பதை நிச்சயித்துக்கொள்வதற்காக உடனே கைகளைநீட்டி அதை ஸ்பரிசிக்கத்தலைப்படும்போது அது உருவெளித்தோற்றமேயன்றி வேறொன்றுமல்லவென்று நிச்சயித்துக்கொள்ளுகிறோம். இவ்வாறே நாசியென்னும் பொறிவாயிலாகவுண்டாகும் கந்தவுணர்ச்சியும், வாய் என்னும் பொறிவாயிலாகவு

ண்டாகும் சுவையுணர்ச்சியும் நம்மைச்சிலசமயங்களில் ஏமாற்றவுங் கூடும், ஸ்பரிசவுணர்ச்சியோ [illegible]கிரம் அவ்வாறு நம்மை இலேசாய் மோசஞ் செய்வதில்லை.

78. கே.—சில[illegible]குச் சில பொறி புலன்கள் குறைவுபட்டிருக்கினும் அவர்கள் எ[illegible]புலன்களும் நன்[illegible] அமைந்தவர்களைப்போலவே ஜீவித்துவருகின்றார்களே, அதெப்படி?

ஆ.—சிலபுலன்கள் சிலருக்குக் குறைவுபடுமாகில் அவர்களுக்கு உடனே ஏனைபுலன்கள் [illegible]மிகவும் அபிவிர்த்தியடைகின்றன. அதனாலே அவர்கள் ஒருபுலன்கெட்டமையால் பாதிக்கப்படாமலே யாவரும் வியக்கும்படி ஜீவித்துவருகின்றார்கள். கண்பழுதுபட்டுக் குருடாயிருப்பவர்களுக்கு முக்கியமாய் ஸ்பரிசவுணர்ச்சிமிகவும் அதிகப்பட்டுவிடுகின்றது. குருடர்கள் தாம் வாசிப்பதற்காக மரமுதலியவற்றால் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை அ[illegible]லினாவாய் ஸ்பரிசித்து எவ்வளவும் பிழையின்றி வாசித்துவிடுகிறார்கள். கண்ணுள்ள சிறுவனொருவனும் கண்ணிலாச் சிறுவனொருவனும் தத்தமக்கேற்பட்டுள்ள புத்தகங்களை ஒரே அளவுக்கு வாசித்திருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். அவ்விருவரையும் பரீட்சிக்கும்போது கண்ணுள்ள சிறுவன் தன் புஸ்தகத்தை வாசிக்கையில் பிழைபடினும்படுவான். கண்ணிலா ஒருவன் தன்பாடத்தில் எவ்வளவும் பிழைபடான். இவ்விசித்திரத்தை அநுபவவாயிலாகச் சிலர்கண்டேயிருக்கிறார்கள். (Elgin) எல்ஜின் என்னும் கிராமத்திலிருந்த (James Mitchell) ஜேம்ஸ் மிட்செல் என்னும் சிறுவனொருவன் பிறவியிலேயே குருடாகவும் ஊமையாகவும் செவிடாகவுமிருந்தான். அவனுக்கு வயது ஏற ஏற ஸ்பரிசவுணர்ச்சியும் கந்தவுணர்ச்சியும் மிகவும் அதிகப்பட்டன. தன்னுடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் இன்னாரென்றும் அன்னியர்கள் இன்னாரென்றும் வாசனையினாலேயே அவன் ஒருநொடியிலறிந்துகொள்வான். அவனுடையவீட்டில் ஏதேனும் சுபாசுபம் நடக்கும்போது தன் வீட்டுக்குவரும் ஸ்திரீ புருஷர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைக்கிரமப்படி முகமன்கூறி அவரவர்களை உள்ளே அழைத்துக்கொண்டுபோவான். சிலசமயங்களில் அவர்கள் வண்டியிலிருந்திறங்கும் இடத்திற்கேசென்று அவர்களை வரவழைத்துக்கொண்டுவருவதுமன்றிச் சில வேளைகளில் அவ்வண்டிகளின் வில் நன்றாயிருக்கிறதாவென்று கீழும்மேலுமாக அசக்கியும்பார்ப்பான். இவ்வாறு, குறைவுபட்டிருக்கும் புலன்களுக்குப்பர்த்தியாக எஞ்சியுள்ள ஏனைய புலன்களுக்கு யாவரும் வியக்கத்தக்க அவ்வளவு விசேஷவுணர்ச்சியைத் தந்து ஆன்மாக்களை ரக்ஷிப்பது சர்வஜீவதயாபரரான கடவுளின் கருணையாயிருக்கிறது.

79. கே.—வியாதியஸ்தன் படுத்துக்கொண்டிருக்கும் அறையில் முகம்பார்க்குங் கண்ணாடியிருக்கக்கூடாதென்று நம்வீட்டு வைத்தியர் நேற்று உத்தரவு பண்ணினாரே, அதற்குக் காரணம் யாது?

ஆ.—பிணியாளி தான் தேகாரோக்கியஸ்திதியிலிருந்தபோது தன்முகமிருந்ததன்மையையும் இப்போது தன்முகமிருக்குந்தன்மையையும் ஒத்திட்டுப்பார்த்து, ஐயோ, நான் இவ்வளவு பலஹீனனாய் விட்டேனேயென்று அதைரியப்படுவானாகில் அவனுடைய பிணி இன்னும் அதிகப்படுமாதலால் அப்பிணியாளி படுத்துக்கொண்டிருக்கும் அறையில் முகம்பார்க்குங் கண்ணாடியிருக்கக்கூடாதென்று வைத்தியர் சொன்னார்.

80. சீ.—பிணியாளியிருக்கும் வீட்டில் குசுகுசுவென்று மெல்லென இரகசியம் பேசக்கூடாதென்றும் வைத்தியர் கட்டளையிட்டனரே, அதற்குக் காரணம் யாதையா?

ஆ.—பிணியாளி அப்படிப்பட்ட விஷயத்தைக் காணும்போது, நம்முடைய தேகநிலைமையைப் பற்றியாவது நம்மைச்சேர்ந்தவர்களைப்பற்றியாவது பிறர் என்னபேசிக்கொள்ளுகிறார்களோ? நம்முடைய பிணி நீங்குமோ? நீங்காதோ? என்னும் இவைபோன்ற வீணான எண்ணங்கள் அவனுடைய மனதிற்பிரவேசிக்கும். அதனால் கவலை மிகுதியாகி அவன் பலஹீனப்படுவான்.

81. சீ.—பிணியாளனை அடிக்கடி போய்ப்பார்ப்பது கூடாதென்று வைத்தியர் திட்டஞ்செய்திருக்கிறாரே, அதற்குக் காரணம்யாது?

ஆ.—எப்படிப்பட்ட பிணியாளனும் தனக்குஇன்னபிணியிருக்கிறதென்றும், அதனாலே தான் மிகவும் பலஹீனமடைந்திருக்கிறேனென்றும் வைத்தியரொருவருக்கன்றிப் பிறருக்குக் காட்டிக்கொள்ள எவ்வளவும் முயல்வதில்லை. அது மானிட இயற்கை. ஆகையால், பிறர் தன்னைப்பார்க்கவரும்போது அவன் தன்னுடைய பலஹீனத்தைக் காட்டிக்கொள்ளாதபடி நல்ல ஸ்திதியிலிருப்பவனைப்போல் சிறிதுநேரம் நடிக்கிறான். இதனாலே, பார்க்கவந்தவர்கள் போனவுடனே அப்பிணியாளனுக்கு முன்னிருந்ததைவிட மிகவும் அதிகபலஹீனமுண்டாய்விடுகின்றது. இவ்வாறு தேகஸ்திதி திடீரென்று அடிக்கடி மாறுவதனால் சில பிணியாளிகள் இறந்தேபோயிருக்கிறார்கள்.

82. சீ.—பிணியாளிகளைப் பார்க்கவருபவர்கள் அதிக சந்தோஷமும் மனக்கிளர்ச்சியுமுள்ளவர்களைப்போல் தம்மைக்காட்டிக் கொள்ளக்கூடாதென்று வைத்தியாப்பியாசிகள் புத்திமதிகூறுகின்றனரே, இதற்குக் காரணம் யாது?

ஆ.—இதற்குமுன் நீ கேட்ட வினாவுக்கு யான் தந்த விடையே இதற்கும் சமாதானமாகும். அன்றியும், மிகவும் மனக்கிளர்ச்சியோடிருப்பவர்களைப் பார்க்கும்போது பிணியினால் வருந்துவோர் நாம் அவ்வாறிருப்பதற்கில்லையேயென்று அகத்தில் துயரப்படுவதியற்கை

83. சீ.—ஆந்தை பட்டணங்களில்வந்து கூக்குரலிட்டால் மரணம் சம்பவிக்குமென்கிறார்களே, அது உண்மைதானா?

ஆ.—ஆம். உண்மைதான். நிச்சலவாயுவின் சீதோஷ்ணநிலைமைகள் சடுதியில் மாறும்போது ஆந்தை முதலிய சிலபட்சிகளின் சுவாசக்குழல் முதலாகிய உறுப்புகள் அவ்வேறுபாடுகளினாலே குவிதலும் விரிதலுமுளவாதலின், அம்மாறுதலினாலுண்டாகும் நோய்க்காற்றாது அப்பட்சிகள் கூக்குரலிடுவது வழக்கம். சீதோஷ்ண நிலைமைகள் திடீரென்றுமாறும் தருணங்களில்தான், நெடுநாளாய் வியாதியஸ்தர்களாயிருந்து பலஹீனமடைந்தவர்கள் உயிர்துறப்பது வழக்கம். இது காரணமாகத்தான் சீதோஷ்ண நிலைமைகள் மாறும் அமாவாசை, கிருத்திகை முதலியதினங்களிலாவது அப்படிப்பட்ட தினங்களுக்குச் சமீபமாகவாவது [illegible] பிணியாளர்கள் இறந்துபோவதுண்டு. ஆந்தை முதலியபட்சிகள் கூவுவது மரணம் சம்பவிப்பதற்குக் காரணமாகமாட்டாது. ஆனால், அது மரணத்திற்கு அறிகுறியென்று உலகினர் சொல்வது நியாயந்தான். இதுபோலவே இன்னுஞ் சில சகுனங்களுக்கும் சாஸ்திர சம்மதமான நியாயங்கள் கூறுதல்கூடும். (இன்னும்வரும்.)

## கண்ணாரக்கண்டதும்பொய், காதாரக்கேட்டதும்பொய், தீரவிசாரித்தது மெய்.

நாம் காணும் ஒவ்வொருவிஷயத்தையும் கேட்கும் ஒவ்வொருவிவகாரத்தையும், நாமேநேரிற்கண்டதுதானேயென்றும், நாமேநேரிற்கேட்டதுதானேயென்றும் நினைத்துக்கொண்டு அந்தந்த விஷயத்தைப்பற்றியும் அந்தந்தவிவகாரத்தைப்பற்றியும் பொறுமையுடன் தீரவிசாரித்தறிந்து கொள்ளாமல் நிச்சயித்துவிடுவது பெரும்பாலும் ஆபத்துக்கிடம். ஒவ்வொருவேளையில் அப்படிப்பட்டநிச்சயங்கொண்டவன் தானேஉயிர்விடத்துணியத்தக்க அவ்வளவு கெடுதியும் நேரிடுகின்றது. இதுகுறித்தே "கண்ணாரக்கண்டதும்பொய், காதாரக்கேட்டதும்பொய், தீரவிசாரித்ததுமெய்." என்னும் மேலேகாட்டிய பழமொழியும் வழங்குகின்றது. திருவள்ளுவரும் தமது திருக்குறளில் தெரிந்துசெயல்வகை-தெரிந்துதெளிதல் - தெரிந்துவினையாடல் என்னும் மூன்றதிகாரங்களாக இவ்விஷயத்தை வற்புறுத்திக்கூறியிருக்கின்றனர். இவ்வாறுதெரிந்துதெளியாமற் கொலைபாதகத்திற்குள்ளான ஒருவனுடைய சரித்திரத்தை இதற்குதாரணமாக அடியில் எழுதுகிறோம்:—

ஒரூரில் ஒருஅரசன் அரசாண்டுவருங்காலத்தில் ஒருநாள் தனது மந்திரியை அழைத்து அமைச்சனே! நாம் நகர்சோதனைக்குப்போய் நெடுநாளானபடியால் அவசியம் இன்றிரவில் போகவேண்டுமென்று அபிப்பிராயம்தெரிவித்தான். அதுகேட்டமந்திரி அரசனுடைய கட்டளைப்படியே அன்றிரவு அரண்மனைக்குவந்து மாறுவேஷம் போட்டுக்கொண்டு அரசனுடன் கூடப்போனான். இவ்வாறு மந்திரியுட

ன் மாறுவேஷம் போட்டுக்கொண்டு நகர்சோதனைக்காகப் புறப்பட்ட அரசன் வீதிவழியாகப்போனால் ஒருவேளை தன்னை யாராவது தெரிந்துகொள்ளப் போகிறார்களென்று ஒருதோட்டத்தின் வழியாகச்சென்றான். அவ்வாறு செல்லுகையில் அந்தத்தோட்டத்தின் குளத்தில் வலைவீசிக்கொண்டிருந்த ஓர்வலைஞன் - பாகிராத்திரியாய்விட்டபடியால், இதுவரையில் அகப்படாத மீன் இனிமேல் அகப்படப்போகிறதா? என்று சிந்தித்துத் தன்வலையை உதறி எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அதுகண்ட அரசன் அவ்வலைஞனைத் தன்னருகிலழைத்து, நீ யார் அப்பா? இவ்வளவுநேரம்வரையில் இந்தக்குளத்தண்டை என்னசெய்துகொண்டிருந்தாய்? என்றுகேட்டான். அதற்கு அவ்வலைஞன் - ஐயா! நான் ஜாதியில் செம்படவன், மிகவும் ஏழை, காலைமுதல் இதுவரையில் ஓயாமல் இக்குளத்தில் வலைவீசிக்கொண்டிருந்தும் ஒருமீனாவது அகப்படாமையால் இளைத்துப்போய்என்வலையைஉதறிக்கொண்டுவீட்டுக்குத்திரும்புகிறேனென்றான். உடனேஅரசன் அவனைப்பார்த்து, அப்பா! நீ இவ்வளவில் சலித்துவிடக்கூடாது, "முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்." என்றும், "முயற்சி திருவினையாக்கும்." என்றும், "முயற்சிதன்மெய்வருத்தக்கூலிதரும்." என்றும், "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்." என்றும், முயற்சியைப்பற்றியும் சோம்பலைப்பற்றியும் பெரியோர்கள் கூறியுள்ள முதுமொழிகளை அலட்சியஞ்செய்யாமல் இன்னொருமுறை உன்வலையைவீசு, அதில் என்னவந்தபோதினும் நான் எடுத்துக்கொண்டு உனக்கு நூறுரூபாய் கொடுத்து விடுகிறேனென்றான். அவ்வரசன் சொன்னதைக்கேட்ட வலைஞன் அவ்வாறு செய்யத்துணிந்து மறுபடி தன்வலையை வீசினான். உடனே அவ்வலையில் ஓர்பெட்டியகப்பட்டது. அந்தப்பெட்டியை இழுத்து வெளியிற்போட்டதைக்கண்ட அவ்வரசன் அவ்வலைஞனைக்கொண்டே அப்பெட்டியை எடுப்பித்துக்கொண்டு தன் அரண்மனைக்குச்சென்று அவ்வலைஞனுக்கு வாக்குதத்தஞ்செய்தபடியே நூறுரூபாய் கொடுத்தனுப்பிவிட்டு, தன்னுடன் கூடவந்த மந்திரியைப்பார்த்து அப்பெட்டியைத் திறக்கச்சொன்னான். அவ்வாறே அம்மந்திரி அப்பெட்டியைத்திறக்க அதில் ஒருபெண்ணின் அவயவமுழுமையும் துண்டு துண்டாய்வெட்டி நிரப்பியிருந்ததை அரசன்கண்டு பிரமைகொண்டு நடுநடுங்கிப் பெருமூச்செறிந்து கோபாவேசமுடையவனாய் மந்திரியைநோக்கி, சபாஷ்! நன்றாயிருக்கிறது! இப்படிப்பட்ட ஸ்திரீஹத்திசெய்யும் பாபிகளை உயிர்போக்காமல் வைத்துக்கொண்டுதானா நான் அரசாட்சிசெய்கிறது! என்னரசு இருந்தவாறு நன்று! நன்று! என்று பலவிதமாகத் துக்கித்துப்பிறகு ஒருவாறு மனந்தேறி, அமைச்சனே! இதுவரையில் நம்தேசத்திலுள்ளார் செய்கைகளையெல்லாம் நீ கண்டு சீர்திருத்திக்கொண்டு வருகின்றாயென்று நம்பியிருந்தேன், இன்றுதான் உன்னுடைய நகரவிசாரணைத்திறம் எனக்குத் தெரியவந்தது

இனிநானே சகலமுங்கண்டு சீர்திருத்தினலன்றிக் குடிகளுக்கு நியாயங்கிடைக்காது; இப்போது நேர்ந்துள்ளஇந்த ஸ்திரீஹத்திக்கு மாத்திரம் காரணம் நீயே தேடவேண்டுமாகையால் இன்றுமுதல் இரண்டுநாளைக்குள் இக்கொலைசெய்தவனைக் கண்டுபிடித்து அவனை என்னிடத்தில் அழைத்துக்கொண்டு வரவேண்டும், இல்லாவிடில் இந்த ஸ்திரீஹத்திக்கு நீதானே காரணனென்று உன்னையே கொலைசெய்து விடுவேனென்றான். இவ்வசனத்தையுங்கேட்ட மந்திரி இடியோசையைக்கேட்ட சர்ப்பம்போற்கலங்கி எண்ணாதனவெல்லாமெண்ணி மனம்புண்ணாகி நடக்கக் கால்வாராமல் தட்டித்தள்ளாடிக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்து, அன்றையதினமுதல் தன்னாற் கூடியமுயற்சியோடு பலபல விதத்தினாலே அன்றுமுழுதும்விசாரித்துக்கொண்டுவந்தும் இரண்டாம்நாள் காலைவரையிலே கொன்றவன் இன்னானென்று தெரியவராமையினால், மந்திரி தீராத்துயரங்கொண்டவனாய் மரணத்திற்குத்துணிந்து, வீட்டிலுள்ளார் யாவருக்கும் இன்றையதினந்தான் என்னுடைய வாழ்நாளின்முடிவு என்று தெரிவித்துக்கொண்டிருக்கையில், அரசனிடத்திலிருந்து வேவுகாரர்கள்வந்து மந்திரியைநோக்கி, உம்மை அரசன் அழைத்துவரச்சொன்னான் என்றார்கள். அதுகேட்டவுடனே மந்திரி "உள்ளபடி முடியுமெலாமுள்ளபடிகாணே." என்னும் பெரியோர்வாக்கியத்தைச் சிந்தித்து, தன்னுடைய உடைமுதலியவற்றை உடுத்திக்கொண்டு, அவ்வேவுகாரர்களுடனேசென்று அரசனைக்கண்டு, இராஜாதிராஜனே! என்னுடைய முயற்சியால் கூடியவரையிலே கள்ளமில்லாமல் விசாரித்தும் அக்கொலைஞன் அகப்படவில்லையென்றான். அதுகேட்ட அரசன் - நல்லது, அப்படியானால் நீதான் அக்கொலையாளியின் தண்டனைக்குப்பாத்திரனாகவேண்டுமென்றுசொல்லி, உடனே தண்டவினைஞரையழைத்து, இவனை இன்றுமாலை சிரச்சேதம் செய்துவிடுங்களென்று உத்தரவுசெய்தான். அந்தப்படியே அத்தண்டவினைமாக்கள் மந்திரியைப் பிடித்துக்கட்டிக்கொண்டுபோகையில், அவ்வீதிவழியே போய்க்கொண்டிருந்த ஓர்வாலிபன் இச்சங்கதியைக்கேட்டு, ஐயோ!. கொலைசெய்தவன் நானாயிருக்க யாதொருபாவமும் அறியாத இம்மந்திரியை ஏன் வீணாய்ச் சிரச்சேதம் செய்யவேண்டும்? அக்கொலைசெய்தவன் நான்தானென்பதை யாவருக்கும் திருப்தியாகும்படி கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேனென்றான். இதைக்கேட்டுக்கொண்டு அவனுடன் கூடவந்த வயோதிகனொருவன் - இவ்வாலிபன் இன்னுஞ் சிலகாலம் இவ்வுலகத்தில் உயிரோடிருப்பானாகில் இவனுடைய குழந்தைகள் முதலியவர்களுக்கு ஆதாரவாயிருப்பானே, நானிருப்பதனால் யாருக்கென்னபயனென்று தனக்குள்ளே கருதிக்கொண்டு, ஓ!ஓ! இதென்ன? இந்தவாலிபன் இவ்வளவு அசத்தியம் பேசுகின்றானே, அப்பெண்ணைக்கொன்று பெட்டியிலடக்கஞ்செய்து குளத்தில் விட்ட நானிருக்க, இவ்வாலிபன் இவ்வளவு துணிவாகக் கடவுள்சாட்

சியென்று யாவரும் நம்பும்படிசொல்லுகின்றனே, "கிழவன்பாட்டு கி[illegible] கேற்கப்போகின்றதா?" என்று பரிகசித்தான். இவ்விரண்டையுங்கேட்ட மந்திரி அத்தண்டனைக்காரர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவ்விருவரையும் அழைத்துப்போய் அரசனெதிரில்விட்டு அவர்கள் கூறிய அனைத்தையுங் கூறினன்.

(இன்னும்வரும்.)

## ஓர் கரடியின் கதை.

### 24-ம் அத்தியாயம்.

### செல்வியின் கதை.

மழைக்காலமெல்லாங் கழிந்து வேனிற்காலம் வந்தபோது செல்வியென்னும் சிறு கரடி அக்குழியின் மத்தியிலிருந்த கம்பத்தின்மேலேறி உட்கார்ந்துகொண்டு பலகாரங்களைக் கெஞ்சிக் கேட்கவும், சற்றேறக்குறைய விக்கிரமவீரன் செய்துகொண்டுவந்த வேடிக்கையெல்லாம் செய்துகாட்டவும் கற்றுக்கொண்டது.

செல்வியென்னும் சிறு கரடியேயன்றி இன்னும் அநேக பிராணிகள் நூதனமாய் அத்தோட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டிருந்தமையால் அவைகளையெல்லாம் பார்ப்பதற்காகத் தினந்தோறும் ஜனங்கள் திரள்திரளாக வந்துகொண்டிருந்தார்கள். விக்கிரமவீரனும் செல்வியுமிருந்த் குழிக்கு அதிசமீபத்தில் ஒரு கூட்டிலே நான்கு சிறுகரடிக் குட்டிகளும், இன்னும் சிறிது தூரத்திலே சிறு கழுதைப்புலி ஒன்றுமிருந்தன.

குழியின் மத்தியில் நட்டிருந்த கம்பத்தின்மேலேறி யுட்கார்ந்து விருட்சங்களையும் புஷ்பங்களையும் பார்த்துக்கொண்டிருப்பதில் செல்வி மிகவும் விருப்பங்கொண்டிருந்தது. பலகாரங்களும் இலந்தைப்பழங்களும் அச்சிறு கரடிக்கு மிகவும் பிரீதியாயிருந்தனவாகையால், அக்குழியில் அவரவர்கள் போட்டுக்கொண்டுவந்த பலகாராதிகளையும் கனிவர்க்கங்களையும் செல்வியே வயிறாரத்தின்று இளைக்குமளவும் விக்கிரமவீரன் சும்மா பார்த்துக்கொண்டேயிருந்து பிறகு மிகுந்ததைச் சந்தோஷத்தோடு உண்டுவந்தது.

விக்கிரமவீரனைப்போல் செல்வியென்னும் பெண்கரடி குழந்தைகளோடு விளையாடியும், தின்பண்டங்களை அவைகள் கொடுக்க வாங்கித்தின்றும், அவைகளோடு சீராடியும், வசித்தும் பழகியறியாததாகையால் விக்கிரமவீரனைப்போல் அதற்குக் குழந்தைகளிடத்தில் விசுவாசமில்லை. விக்கிரமவீரன் குழந்தைகளிடத்தில் பிரீதியாயிருப்பதைப் பார்க்கச் செல்விக்குச் சிறிது பொறாமையுமுண்டாயிற்று; சில சமயங்களிலே அநேக குழந்தைகள் ஏககாலத்தில் வந்து அக்குழியைச் சுற்றிலும் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோது குழிக்குள் எறியப்பட்ட பலகாராதிகளைச் செல்வியைத் தின்னவிட்டு விக்கிரமவீரன் தான்மாத்திரம் கம்பத்தின்மேலேறி யுட்கார்ந்து அக்குழந்தைகளோடு குலாவிக்கொண்டிருக்கும். குழந்தைகளுக்கு எப்போதும் அதனிடத்தில் அதிக பிரீதி.

மறுபடியும் மழைக்காலம் வந்தபோது குழந்தைகள் அவ்வளவாக அடிக்கடி அக்குழியண்டை வருவதும், பலகாரங்கள் உள்ளே வீழ்வதும் குறைந்த

படியால், பொழுதுபோக்காக செல்வியானது தனக்கு ஞாபகமிருந்தமட்டில் இப்போது தன்னுடைய அடிநாளைய விர்த்தாந்தங்களை விக்கிரமவீரனுக்குச் சொல்லிக்கொண்டுவந்தது. சில விஷயங்களில் அது சொல்லிக்கொண்டுவந்த விர்த்தாந்தங்கள் விக்கிரமவீரன் அடிநாளையில் குகையிலிருந்தபோது நேரிட்டவைகளைப்போலவே யிருந்தன. எங்கும் பனிமூடிக்கொண்டும், கரடிகளுக்குள் பெரும்பான்மை அயர்ந்து நித்திரை செய்துகொண்டுமிருந்தபோதுதான் செல்வியும் பிறந்தது. ஆனால், விக்கிரமவீரன் பிறந்த மலைப்பிரதேசத்திற்கும் செல்வி பிறந்த இடத்திற்கும் மிகவும் வித்தியாசமுண்டு. அப்பெண்கரடி பிறந்த இடத்திற்குச் சமீபமாகப் பெருங் காடுகளிருந்தன. அக்காடுகள் அனேகமைல் விஸ்தீரணம் பரவியிருந்தபடியால், நெடுந்தூரம்வரையில் கிராமங்களாவது மனிதர் சஞ்சாரமாவது கிடையாது. வேட்டைக்காரர்கள் அதன் வாசஸ்தலத்துக்குச் சமீபமாக வந்தாலன்றி மற்றப்படி எவ்வித மனிதர்களும் அங்கிருந்த கரடிகளின் கண்ணுக்குப் புலப்படார். செல்வியின் தாய் அதற்குச் சொல்லிக்கொண்டுவந்த கதைகளெல்லாம் சற்றேறக்குறைய தூரதேசங்களாகிய அந்தப் பிரதேசங்களிலிருந்த மற்றப்பிராணிகளைப் பற்றியவைகளேயாகையால், அப்பிராணிகளுக்குள் சிலவற்றைக்குறித்து விக்கிரமவீரன் ஒருபோதுங் கேட்டேயிராது; அப்படிப்பட்டவைகள் தன்னுடைய வாசஸ்தலத்திற்குச் சமீபமாக இருந்தகாட்டில் அகப்படுவதில்லை. செல்வியின் தாய்க்கப்பன்மார் மிகுந்த குளிர்ச்சியினால் பனிக்கட்டிகளாக இறுகிய சமுத்திரத்திற்கருகே அடிக்கடி சென்றும், துருவப் பிரதேசக்கரடியைத் தம்வாசஸ்தலத்தில் கண்டுமிருந்தன.

அப்பெண்கரடி பிறந்த சீதளப் பிரதேசத்தில் மழைக்காலம் மிகவும் நீடித்திருப்பதுமன்றி, அப்போது குளிர் பொறுக்க முடியாத அவ்வளவு மிகுந்துமிருப்பது வழக்கம். வேனிற்காலமோ மிகவும் குறைந்திருக்கும். அந்தக் காலத்திலே, சீதோஷ்ண நிலைமைகள் அமிதமாயிராமல் சாதாரணமாயிருக்கத்தக்க பிரதேசங்களிலே உஷ்ணம் எவ்வளவிருக்குமோ அதைவிட உஷ்ணம் மிகுந்திருக்கும். சமுத்திரதீரத்திற்குச் சமீபமாய் வசித்துக்கொண்டிருக்கும் கரடிகள் கரையோரங்களில் அகப்படும் மீன்களைப் பிடித்து விருந்துண்பதற்காக வேனிற்பருவத்தில் இராக்காலங்களிலே நெடுநேரம்வரையில் கரைகளில் காலங்கழிக்கும். வெண்கரடிக்கு மாத்திரம் தண்ணீரில் அதிக பிரீதியிருக்கிறதென்று சொல்வதுகூடாது. ஏனெனில், அந்தப் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு கரடியும் சற்றேறக்குறையச் சமுத்திரத்தில் நீந்த விருப்பங்கொள்ளுகிறது. செல்வியின் வாசஸ்தலத்திற்குச் சமீபமாகச் சற்றேறக்குறையச் சமுத்திரத்தைப்போலிருக்கும் பெரிய ஏரி ஒன்றுண்டு. செல்வி அதிபாலியமானபடியால் அந்த ஏரியைப்பார்ப்பதற்காகத் தன் வீட்டைவிட்டு ஒருபோதும் வெளியே வந்ததில்லையாயினும், மீன்களைப்பற்றியும், தண்ணீரிலிருக்கும் சிறு ஜந்துக்களைப்பற்றியும் சில விஷயங்கள் அதற்குத் தெரிந்திருக்கின்றன. சிறு கரடியாகிய தான் சமுத்திரதீரத்திற்குப் போய்ப்பார்த்தாவது வரவேண்டுமென்று செல்விக்கு அந்தக்காலத்திலே புத்திமதிகள் கூறப்பட்டிருந்தன.

அந்தப் பிரதேசத்திலுள்ள அனேக காட்டுமிருகங்களையும் விந்தையான பட்சிகளையும் செல்வி தானே நேரில்கண்டுமிருக்கிறது. உரோமங்கள் நிறைந்த துருவப்பிரதேச ஓர்வகைக் கீரிப்பிள்ளைகள் அதனோடு விளையாடிக்கொண்டிருந்தன. ஏனெனில், பெருங்கரடிகள் மீன் முதலியவற்றைத் தின்று திரும்புகையில் வழியில் சிந்திப்போயிருக்கும் கண்ட துண்டங்களைத் தின்பதற்காக இந்தப் பிராணிகள் அவற்றைப் பின்தொடர்ந்து வருவதுண்டு.

அந்தப் பிரதேசங்களில் துருவப் பிரதேசக் கரடியைப்போலவே மழைக் காலத்தில் வெண்மையாயுள்ள வேறொருவகையான கீரிப்பிள்ளைகளுண்டு. அவைகளுடைய வால்களின் முனைமாத்திரம் கறுத்திருக்கும். வேனிற்காலம் ஆரம்பமாய்ப் பனிக்கட்டிகள் உஷ்ணத்தினாலே நீராயுருகும் சமயத்திலே அப்பிராணிகளின் வெளுத்தமேற்றோல் மெல்லக் கறுத்துவிடுகிறபடியால் மறுபடியும் மழைக்காலம் வருமளவும் சாதாரண கரடியைப்போலவே அது கருமையாகத்தோன்றும். புருசான மயிருள்ள சட்டிகளைப் பார்க்கினும் இச்சிறு பிராணிகளுக்கு மிகவும் அழகான உரோமம் அமைந்திருக்கிறபடியால் அவைகள் மிகவும் மதிக்கத்தக்கனவாயிருக்கின்றன. அந்தப் பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் அச்சிறு பிராணிகளைப் பிடிப்பதற்காக உறைந்த பனிக்கட்டிகளின்மேல் நெடுந்தூரம்வரையில் யாத்திரைசெய்து கோரமான கஷ்டங்களுக்குள்ளாகி அவைகளின் வாசஸ்தலத்தைத் தேடிச்செல்வது வழக்கம். வேட்டைக்காரர்கள் அடிக்கடி கரடிகளையும் பார்ப்பதுண்டு. அவர்கள் அக்கரடிகளை வலைகள்போட்டுப் பிடித்தாலும் கொன்றாலும் காட்டுவழியாக நெடுந்தூரம்வரையில் கொண்டுபோய்த் தங்களுடைய இருப்பிடங்களுக்குச் சமீபமாகவுள்ள பட்டணங்களில் அவைகளை உயிரோடேயாவது மற்றப்படியாவது விற்றுவிடுவார்கள்.

ருஷியாதேசத்துக்கரடிகள் இமாசலத்தில் வசிக்கும் நீலநிறக்கரடிகளைவிடக் கோரமும் உக்கிரமுமானவைகள். அவைகள் வேட்டைக்காரர்களனேகரைக்கொன்று சின்னபின்னப் படுத்தியிருக்கின்றன. அவைகள் வசிக்கும் தேசங்களிலே வேனிற்பருவம் மிகவும் குறைந்தகால மானபடியினால் கொழுத்துத் தூங்கிச் சோம்பித்திரிய அவைகளுக்குக் கூடாமையாயிருக்கின்றது. மழைக்காலம் வரும்போதே ஆகாரம் அவைகளுக்கு எங்கும் அகப்படாமையினாலே அவைகள் வேட்டைக்காரர்களையே வேட்டையாடித் துரத்திவிட்டு வடதேசத்துக் கலைமான்களைக்கொன்று தின்னுகின்றன. அவைகளுக்குள்ளே பசியினால்வருந்தும் சில சிறு ஜந்துகள் தாம் வசிக்குமிடங்களில் வழிப்போக்கர் யாராவது கிரகசாரம் பேர்தாமல் வருவார்களாகில் அவர்களைக் கொன்றுவிடுவதுமன்றித் தின்றும்போடும்.

ஒரு சமயத்தில் சில வழிப்போக்கர்கள் காட்டில் இரவுமுழுதும் நித்திரைசெய்ய நேரிட்டபோது உக்கிரமான தோண்டான்களும் கரடிகளும் சமீபத்தில் வந்து தமக்கு உபத்திரவஞ்செய்யாதபடி பாதுகாப்பாக அனேகமரங்களை வெட்டித் தங்களுடைய படுக்கையைச் சுற்றிலும் தீமூட்டி வைத்துக்கொண்டிருந்தார்கள். அத்தீயினால் தோண்டான்கள் ஒருவேளை பயந்து ஓடிப்போயிருக்கலாம்; கரடியோ அந்நெருப்பாகிய தடைக்கஞ்சி யுள்ளேயிருக்கும் ஆகாரத்தை விட்டுப்போய் விடவில்லை. அது மகா தந்திரசாலி. அங்கு சமீபத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒரு அருவியில் அதுபோய் நன்றாய் முழுகித் தன் தேகமுழுமையும் செவ்வையாய் நனைத்துக்கொண்டு அந்நெருப்பின்மேற் பாய்ந்து, எரிந்துகொண்டிருக்கும் கட்டைகளின்மேற் புரண்டு, நனைந்துள்ள தன் உரோமங்களினாலே அத்தீயை அவித்துவிட்டது. அப்பிரயாணிகள் அதைக்கொன்று அதன்தோலை உரிக்கிறவரையில் அதனோடு நெடுநேரம் சங்கடப்பட்டுப் போர்புரிய வேண்டியதாய் நேரிட்டது.

செல்வியென்னும் இச்சிறு கரடியின் தாய் தந்தையர் வேட்டைக்காரர்களோடு அனேக சமயங்களிலே போராடவேண்டியதாய் நேரிட்டது. தான் பிறந்த காட்டிலேயே பெரிதாகிற வரையில் அது ஜீவித்திருக்குமாயின் அதுவும் தன் இனத்தைச்சேர்ந்த மற்றக் கரடிகளைப்போலவே தைரியசாலியாகவும் உக்கிரமாகவுமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், தன்னுடைய

வீட்டைவிட்டு வெளியே போக முடியாத அவ்வளவு பாலியதிசையில் அது இருந்தபோதே வலையில் பிடிபட்டுத் தன்னுடைய தோழர்களைவிட்டு நெடுந்தூரம் கொண்டுவரப்பட்டது. அது மண்மேட்டில் தோண்டப்பட்ட ஒரு பொந்தில் வசித்துக்கொண்டிருந்ததேயன்றிக் குகைக்குள் ஒருபோதும் வசித்ததேயில்லை. பெருங்கரடிகள் ஒருநாள் காலையில் ஆகாரத்துக்காக வெளியே போயிருந்தபோது சிறு கரடிகளும் காட்டில் இங்குமங்குந் திரிந்து தங்களுக்குச் சுலபமாய் அகப்படக்கூடிய இலை தழை முதலியவற்றைத் தின்றுகொண்டிருந்தன. அவைகளுக்குள் ஒன்றாயிருந்த செல்வி தன்னுடைய சகோதரர்களையும் சகோதரிகளையும் விட்டு நெடுநேரம் வரையில் திரிந்துகொண்டே அக்காட்டில் ஓரிடத்திலே வந்தது. அவ்விடத்தில் ஏராளமாய்த் தேவதாரு விருட்சத்தின் கொட்டைகள் பரவியிருந்தன. அக்கொட்டைகளை செல்வி அதற்குமுன்னே தின்றிராதபடியாலும், அவைகள் மஹா உருசியாயிருந்தபடியாலும் அது அவைகளை வயிறாரத்தின்றுகொண்டு, தனக்கு விளையப்போகும் ஆபத்து இன்னதென்பதைச் சற்றுமுணராமல், புல்லின்மேலும் பழங்களின்மேலும் நடந்துகொண்டே போயிற்று.

செல்வியென்னும் இக்கரடி வயது முதிர்ந்தும் சாமர்த்தியம்பெற்றுமிருக்குமாயின் அப்படிப்பட்ட உருசியான பழங்களும் கொட்டைகளும் இயற்கையில் அவ்விடத்திலிருப்பதற்கு அது தகுந்த பருவமல்லவென்றும், இளவேனிற் பருவமாகிய அந்தக்காலத்தில் அகப்படாதபழங்கள் வந்ததற்குக் காரணம் யாதென்றும் தனக்குள்ளே ஆலோசித்துத் தப்பித்துக்கொண்டிருக்கும். சிறிய முட்டாள்கரடிகளைப் பிடிப்பதற்காகத்தான் வலைகள் சாதாரணமாகப் போடுவது வழக்கம். ஆழமாயிருந்த படுகுழியின்மேல் போட்டிருந்தவலை கண்ணுக்குத்தெரியாதபடி மோசடியாய் மேலே பரப்பியிருந்த புல்லின்மேல் செல்வியானது காலைவைத்து விட்டது. அதற்குமுன்னிருந்தபழங்களையும் கொட்டைகளையும் தின்றதனாலுண்டாகும் மகிழ்ச்சியினால், இயற்கையில் வளர்ந்திருந்த புல் தரைக்கும் மோசடியாய் அமைக்கப்பட்டிருந்த புல்தரைக்கும் வித்தியாசம் அதற்குத் தெரியாமற்போயிற்று. அப்பொய்த்தரையில் காலைக் கீழேவைத்தமாத்திரத்தில் அது பொத்தென்று கீழேவிழுந்தது. அப்படுகுழி இவ்வளவு ஆழமென்று அதற்குத் தெரியாது. வலையை அவ்விடத்திலிட்டுச் சமீபத்திற் பார்த்துக்கொண்டேயிருந்த ஒருவன் அதை மறுபடியும் புல்தரைக்கு இழுப்பதற்குமுன்பாகக் கயிற்றைக்கொண்டு உட்சுருக்கு போட்டுவிட்டான்

இவ்வாறு அகப்பட்டுக்கொண்ட செல்வி நெடுந்தூரம்யாத்திரைசெய்து பட்டணத்திற்கு வரவேண்டியதாயிற்று. அவ்விடத்தில் அதை ஒருவன் ஓர்வர்த்தகனுக்கு விற்றுவிட்டான். அதை அவ்வர்த்தகன் ஒருகப்பலிற்கொண்டுபோய்வைத்திருந்தான். அக்கப்பலிலிருந்த மாலுமிகள் அதை நன்றாய்ப் போஷித்து அன்புபாராட்டிப் பிரீதியோடு வளர்த்துச் சாந்தமாகவும் அமைவாகவுமிருக்க அதற்குக்கற்பித்தார்கள். இப்படியிருக்கையில் அம்மாலுமிகளிலொருவன்தான் அதை இத்தோட்டத்திற் கொண்டுவந்துவிட்டான்

## மனிதர் வாழ்நாள் வரையறை.

பூர்வகாலத்திலே மனிதர்களுக்கு ஆயுள் அநேக ஆயிரவருஷகாலமாயிருந்ததென்றும், யுகங்கள்தோறும் அவர்களுடைய சராசரி வயது குறைந்துகொண்டேவருகிறதென்றும் ஆரியமதசித்தாந்தம்

கூறுகின்றது. ஏனையமதக்கோட்பாடுகளும் அதை ஒருவாறு ஆமோதிக்கின்றன. இரண்டு மூன்று தலைமுறைகளாக நம் ஒவ்வொருவருடைய குடும்பத்தினரது சராசரி ஆயுட்காலத்தை நிச்சயித்துப்பார்க்குமளவில் அவர்களின் ஆயுள் தலைமுறை தலைமுறையாகக் குறைந்துகொண்டேவருவதை நாம் அநுபவவாயிலாகக்காணலாம். இவ்வாறு நாளாவர்த்தியில் ஆயுள்வரையறை பிரஜைகளுக்குக் குறைந்துகொண்டேபோவதற்கு அந்தந்ததேசங்களின் சீதோஷ்ண நிலைமைகள் மாறுபடுதல், நீர்வளம்-நிலவளம் முதலிய குன்றுதல், ஜனங்கள்தேக சுகாதாரத்துக்கேற்ற விதிகளைமீறுதல், அதிக சொகுசானவாழ்க்கை முதலியவை காரணங்களென்று தத்துவசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். தற்காலத்திலே உலகத்திலுள்ள பற்பல தேசத்திலிருக்கும் ஜனங்களின் சராசரி ஆயுள்வரையறையை யோசித்துப்பார்க்குமிடத்து மேற்கண்ட காரணங்களினாலேயே ஆயுள்வரையறை குறைகின்றதென்று அகங்கையாமலகம்போல் விளங்குகின்றது.

அந்தந்தத்தேசங்களின் தன்மைக்கும் அதிலுள்ளாருடைய ஒழுக்கத்திற்கும் ஏற்றபடி அவரவர்களுடைய ஆயுள்வரையறை மாறிக்கொண்டுவரினும் மொத்தத்திலே உலகத்திலுள்ள சர்வஜனங்களையும் ஒன்றாகத்தொகுத்துப் பார்த்துக் கணக்கிட்டு ஒரு ஐரோப்பிய சாஸ்திரியார் அடியில்வருமாறு அபிப்பிராயந்தெரிவிக்கிறார்.

தற்காலத்திலே மனிதர் சராசரியில் 28 வயதுவரையில்தான் உயிர்பெற்றிருக்கிறார்கள். மனிதர்களுக்குள்ளே நான்கில் ஒருபாகத்தார் 7-வயதிற்குள்ளாகவே இறந்துவிடுகிறார்கள். 100-ல் 6-பாகத்தார்மாத்திரம் 65-வயதுவரையில் ஜீவித்திருக்கிறார்கள். 80-வயதுக்குமேற்பட்டவர்கள் 500-ல் ஒருபங்குக்கு அதிகமில்லை. இவ்வுலகத்திலுள்ள ஜனத்தொகையிலே நாளொன்றுக்கு 90,000 பெயர் மரிக்கிறார்கள். இக்கணக்கின்படி மணியொன்றுக்குச் சற்றேறக்குறைய 3,750 பெயரும், நிமிஷம் ஒன்றுக்கு 60 பெயரும் மரிக்கிறார்களென்று ஏற்படுகின்றது. இதனால் விநாடி ஒன்றுக்கு ஒருவன் இறக்கிறானென்று தெரியவருகிறது. விவாகமானவர்கள் சராசரியில் விவாகமாகாதவர்களைக்காட்டினும் நீடித்து உயிர்வாழ்கிறார்கள். தனவான்கள் சராசரியில் 42-வயதுவரையிலும், ஏழைகள் சராசரியில் 32 வயதுவரையிலும் ஜீவித்துவருகிறார்கள்.

மேற்கண்ட விவரக்கணக்கைப் பன்முறையும் யோசித்துப்பார்க்கையில் செளக்கியம் குறையக்குறைய ஆயுளும் குறைவுபடுகின்றதென்று பிரத்தியட்சமாய்த்தெரியவருகிறது. குழந்தைப்பருவத்திலே மரணம்நேரிடுவது அதிகமாயிருக்கிறபடியால், தாம மரித்தபின்னர் குடும்பசம்ரக்ஷணைக்காக, ஜீவித்திருக்கும்போதே நிதியில் சேருவோர் ஏழெட்டுவயதிற்குக் குறைந்தவயதுள்ள குழந்தைகளைப் போக்தார்களாகச் சேர்ப்பது யுக்தமன்றென்று தோன்றுகின்றது.

மேற்கண்டபடி பிரஜைகளின் ஆயுள்வரையறை குறைந்தும் இறப்பைவிடப் பிறப்பே உலகத்தில் அதிகமாயிருக்கிறதென்று சிலசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கின்றார்கள். அந்தந்த தேசங்களின் நிலவளம்-நீர்வளம் முதலிய அநுகூலங்களுக்கேற்றபடி சில வருஷங்களுக்கொருதரம் ஜனசங்கியை இருமடங்காய்விடுகின்றதாம். இங்கிலாண்ட் தேசத்தில் ஜனத்தொகை சற்றேறக்குறைய 40 வருஷத்துக்கொருமுறை இரட்டிப்பாய்விடுகிறதென்றும் (New Zealend) நியூஜீலாண்ட், (South Wales) ஸவுத் வேல்ஸ் என்னும் பிரதேசங்களில் 15-வருஷத்திற்கொருமுறை ஜனத்தொகை இரட்டிக்கிறதென்றும், நமது இந்தியாவில் சற்றேறக்குறைய 50 வருஷத்திலே அவ்வாறாகிறதென்றும் சிலர் கணக்கிட்டுக்கூறுகிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி இன்னும் விரிவாக மற்றொரு சஞ்சிகையில் கூறுவோம்.

## விசித்திரமான நேத்திரங்கள்.

சாஸ்திரவிஷய சம்பந்தமான ஒரு ஆங்கிலேய பத்திரிகை அடியில் வருமாறு கூறுகின்றது:—

1. விச்பீல்ட் என்னும் நகரத்தில் பதினாறுவயதுள்ள கன்னிகையொருத்தியிருக்கின்றனள். சிறிதுகாலமாக அவளுடைய நேத்திரம் வெய்யிலைப்பார்க்க முடியாமற்போனதால் அவள் இருளான ஒரு அறையிலே சிலநாள்வரையில் இருந்துவந்தனள். அவளுடைய கண் நாளாவர்த்தியில் குணப்பட்டபின் அவள் வெளியேவரத் தலைப்பட்டனள். அப்போது அவளுடைய கண்களுக்குச் சில விசித்திரமான மாறுபாடுகளுண்டாயின. அவள் தன் வலக்கண்ணை மூடிக்கொண்டு இடதுகண்ணால் பார்ப்பாளாகில் சுமார் பத்துமைல் தூரத்திலுள்ள வஸ்துக்களைச் சமீபத்திலிருப்பனபோல் தெளிவாய்க்காணக் கூடியவளானாள்; இடதுகண்ணை மூடிக்கொண்டு வலதுகண்ணால் பார்த்தால் சிறு குண்டூசியின் முனையும் ஒரு பெரிய இருப்புக்கட்டையைப்போல் அவளுக்குத் தோன்றின. அவள் தன் இரண்டு நயனங்களையும் ஏககாலத்தில் திறந்து பார்க்கும்போது எல்லாவற்றையும் சாதாரணமாய் நம்மைப்போலவே பார்த்துவருவாள். அவளுடைய ஒருகண்ணுக்குத் தூரதிருஷ்டி சக்தியும் மற்றொரு கண்ணுக்குப் பூததிருஷ்டி சக்தியும் உண்டாயிருப்பது மஹா விசித்திரமே!

2. அமெரிகாகண்டத்தில் அயோவா என்னும் பிரதேசத்தைச் சேர்ந்த ப்ரான்க்லின் என்னும் பட்டணத்திலே இரண்டு குழந்தைகள் சில தினங்களுக்குமுன்னே ப்ரான்க்லின் ரிக்ஸ்என்னும் துரைக்குப் பிறந்தன. அக்குழந்தைகளுக்கு மயிர் நரைத்தும் கண்கள் உதிரநிறம் போன்றுமிருக்கின்றன. ஒரு குழந்தைக்கு வயது நான்கு. மற்றொன்றுக்கு வயது இரண்டு. வெளிச்சத்தைப்பார்க்க முடியாமல் அக்குழந்தைகள் கண்ணாடி போட்டுக்கொள்ளுகிறார்கள். பகலினும் இர

வில் கண்கள் மிக நன்றாய்த் தெரிகின்றன. இரவில் தரையினின்
றும் ஒரு சிறு ஊசியையும் அக்குழந்தைகள் மிகச் சுலபமாய் எடுக்க
க்கூடும். எல்லா உறுப்புகளினும் மிகச் சிறந்ததும் மிருதுவானது
மான கண்ணைப்பற்றிய இவைபோன்ற அநேக விசித்திரங்களைக் குறி
த்து நாம் அடிக்கடி கேள்வியுறுகிறோம்.

3. சிலவருடங்களுக்குமுன்னே ஐரோப்பியகனவானொருவருடை
ய கண்ணுக்கு,எப்போதும் அவரைவிடாமல் ஒரு பெரியவேட்டைநா
ய் கௌவுவதுபோல் தோற்றமுண்டாய்க் கொண்டுவந்தது. அத
னால்நெடுங்காலம் அவர்மிகவும்மனக்கிலேசமடைந்துவந்தனர். அவர்
தம்முடைய கண்ணைமூடிக்கொண்டால்மாத்திரம் நாயின்தோற்றத்தி
னாலுண்டாகும் உபத்திரவம்சற்றே நீங்கியிருப்பது வழக்கம். ஒருநாள்
அவர் மிகவும் பயந்து தம்மூரைவிட்டு வெளியே எங்கேயாவதுபோயி
ருக்கலாமென்றெண்ணிப்புகைவண்டியிலேறத் தொடங்குகையிலும்
அந்நாய் தன்கோரப்பற்களுடன் கௌவிப்பின்தொடர்ந்தே வருவது
போல் தம்முடைய கண்ணுக்குத் தோன்றிக்கொண்டேயிருந்தபடியா
ல்,அதைத்திரும்பிப்பாராமல் அதிக தீவிரமாய்த் திபதிபவென்று வண்
டிக்குள் நுழைந்து கதவைச்சாற்றிக் கொண்டனர். அவ்வாறு கதவை
சாற்றிக்கொண்டும் அந்நாய்த் தோற்றம் அவரைவிட்டிலது. அவரினும்
அதிகவேகமாய் அந்நாய் வண்டிக்குட் பிரவேசித்ததாக அவருக்குத்
தோன்றியது. இவ்வாறிருக்கையில் ஒருவைத்தியர் அவருடைய க
ண்ணைச்சோதித்துப் பார்த்து ஏதோ சிகிச்சை செய்தபிறகு அந்நாய்
த்தோற்றப்பீடை அப்பிணியாளருக்குப்பரிகாரமாயிற்று, இத்தகைய
விசித்திரங்கள் அநேகம் நேத்திரத்திற்குண்டு.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**யூரோப்-இந்தியா இருப்புப்பாதை.**—யூரோப்பிலிருந்துஇந்தியாவுக்கும்
இந்தியாவிலிருந்து யூரோப்புக்கும் புகைவண்டியிலேறி யாத்திரைசெய்வதற்
கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விருப்புப்பாதை ஈஜிப்ட்,
டர்க்கி, பெர்ஷ்யா என்னும் தேசங்கள் வழியாகச் செல்லுமாம். இதன்நீளம்
1500 மைலாகுமாம். அதற்குப் பிடிக்கும் செலவோ 20 கோடி ரூபாயாம்.
இவ்விருப்புப்பாதை முடியுமாயின் ஐந்துதினத்தில் இந்தியாவிலிருந்து ஐரோ
ப்பாவுக்குப் போய்ச் சேரலாமென்கிறார்கள்.

**ஓர் நூதனயந்திரம்.**—விசித்திரமானயந்திரங்களைக்கண்டுபிடிப்பதில் மஹா
சமர்த்தரான எடிஸன் என்பவர்தூரத்திலிருக்குமொருவரை நாம் அவ்விடத்தி
ற்குப் போகாமலே இருந்த இடத்திலிருந்து பார்க்கக்கூடிய அதியற்புதமா
னயந்திர மொன்றை உண்டாக்கியிருக்கிறாராம். இக்கருவி இன்னமாதிரியாய்
அமைக்கப்பட்டிருக்கிறதென்கிற விவரம்தெரியவில்லை.

**மலைமறைந்தவிசித்திரம்.**—அமெரிக்காகண்டத்தைச்சேர்ந்த காலிபோ
ர்னியா என்னும் தீவிலே 14,000 அடி உயரமுள்ள ஷஸ்தா என்னும் ஒரு
மலை ஒரே இராத்திரிக்குள் மாயமாய்மறைந்து போய்விட்டது. இது அத்
தீவாருக்கும், அதைக்கேள்வியுறும் ஏனையோர்க்கும் விசித்திரமாயிருக்கிறது.

பூமியின் அடிப்புறத்திலுள்ள உஷ்ணசம்பந்தமான அதிர்ச்சியினாலே மலையின் கீழிருந்த தரை பிளவுபடவும், மேலிருந்த மலை திடீரென்று உள்ளே யழுந்திப்போயிருக்கலாமென்று சில விவேகிகள் யூகிக்கிறார்கள்.

**ஸ்காந்தச் செடி.**—இத்தேசத்திலுள்ள ஓர் காட்டில் ஸ்காந்தத்தன்மையுள்ள செடியொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அச்செடியின் இலைகளை யொடிக்க அதையாராவது தொடுவாராகில் அது அவருடைய கைகளை இழுத்துக்கொள்ளுவதுபோல் தோன்றுகிறதாம். இருபது அடி தூரத்திலுள்ள ஊசியை அம்மரம் தன்னிடத்து இலேசாய் இழுத்துக்கொள்ளுகிறது.

**யுத்தம் சீக்கிரம் முடிவதற்கோர் உபாயம்.**—வியன்னாவிலே பண்டிதரொருவர் ஒருவகைவெடிமருந்து உண்டுபண்ணியிருக்கிறார். அது வெடித்தமாத்திரத்தில் புகைநெடுந்தூரம்போய்ப்பரவி அங்குள்ளயாவரையும் மூர்ச்சையாக்கிவிடுகிறது. இம்மருந்தைக்கொண்டு பிரயோகப்படுத்தியகுண்டு எதிரிகள்மேல் விழுந்தமாத்திரத்தில் அவர்கள்யாவரும் பிரக்ஞையற்றுப்போய் விடுவார்களாகையால் அவர்களுடைய தளவாடங்களையும் போர்க்குரிய ஆயுதங்களையும் சுலபமாய்க்கைப்பற்றலாம். இருதிறத்திலும் முடிவுதெரியாமல் நெடுநாள்களாகப் பூர்வகாலத்தில் நடந்துவந்த சண்டைகள் இப்போது பீரங்கி வெடிமருந்து முதலியவை கண்டுபிடிக்கப்பட்டதனால் இரண்டொருதினங்களுக்குள்ளே ஜயாபஜயத்தைத் தெரிவித்து விடுகின்றன. மேலே சொல்லப்பட்ட விஷத்தன்மையுள்ள வெடிமருந்தினால் இன்னுஞ் சுலபமாகவும் சீக்கிரமாகவும் சண்டைகளின்முடிவு தெரிந்துவிடும்போலும்! இதுபோன்ற சூழ்ச்சிகளினாலே போர்புரியும் அரசர்களுடைய குடிகளுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் நிவாரணையாகுமென்பதற்கு ஐயமில்லை.

**பெண்கள்பட்டாளம்.**—அமெரிக்காகண்டத்திலுள்ள நியுயார்க் என்னும்பட்டணத்திலே நூறுபெண்கள் ஒருபட்டாளமாய்ச்சேர்ந்து போர்ச்சேவகத்திற்கென்று பழகிவருகிறார்கள். ஊரில் நேரிடுங்கலகங்களையடக்குவதற்காகவே அவர்கள் ஏற்பட்டிருக்கின்றனர். மெல்லியாரெனப்பெயர்பெற்ற பெண்களுக்கே இவ்வூரில் போர்புரியும் வீரமுண்டாகுமாயின் ஆடவருடைய ஆண்மையை என்னென்று கூறுவது!

**அச்சுவேலையில் விசித்திரம்.**—சிக்காகோல் என்னும் பட்டணத்திலே 579 பக்கங்கள்கொண்ட புத்தகமொன்று 24-மணிநேரத்திற்குள்ளாக அச்சிட்டு, இஷ்டமான காலிகோவினால் கட்டடங்கட்டிப் பூர்த்தியாயிற்று. சாதாரணமாய்க் குறைந்தது ஒருவாரம் பிடிக்கத்தக்கவேலைப்பாடு அவ்வளவும் ஒருநாளையில் நிறைவேறியது வியப்பே!

**பால்குழாய்.**—சென்னையில்வீடுகளிலே ஜலக்குழாய்வைத்திருப்பதுபோல் நியுயார்க் என்னும் பட்டணத்தில் சில கட்டணங்கள் பெற்றுக்கொண்டு ஒரு கம்பெனியார் வீடுகள்தோறும் பால்குழாய் அமைத்துக் காலைமாலைகளில் பால் [illegible]கிறார்கள். தண்ணீரைப்போலவே பாலுஞ் ஜீவாதாரத்திற்கு இன்றியமையாததாகையால் அதை அந்நகரத்தார் ஏராளமாய் உபயோகிக்கிறார்கள்போலும்!

**கோடீஸ்வார்.**—அமெரிக்காவிலிருக்கும் ஜே கௌல்ட் என்பவரே உலகத்திலுள்ள யாவரினும் செல்வந்தர். கணக்கிட்டுப்பார்க்கையில் அவருக்குமணியொன்றுக்கு 300 பவுண்ட்வருமானமென்று தெரியவருகிறது. இவர்தம்முடைய 20-வதுவயதில் அரைக்காசுக்குங் கதியற்றிருந்தார். தம்முடைய சொந்த முயற்சியினாலும் ஊக்கத்தினாலும் புத்திகோசரத்தினாலுமே இவர் இவ்வளவு தனிகரானார். ஆதலின், "முயற்சி திருவினையாக்கும்." என்பது முக்காலத்தும் சத்தியமே.

PRINTED AT THE ALBINION PRESS:—MADRAS.